ஓம
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு எ } மெய்கண்டான்யாண்டு-எஎஎ மார்கழித் திங்கள் 1929 டிசம்பர் 1930ஜு ஜனவரி ரூ { பரல் கஉ

திருச்சிற்றம்பலம்

கழியுளா ரேனவுங் கடலுளா ரேனவுங்
காட்டுளார் நாட்டுளா ரேனவும்
வழியுளா ரேனவு மலையுளா ரேனவு
மண்ணுளார் விண்ணுளா ரேனவும்
சுழியுளா ரேனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே.

சம்பந்தர்.

உரை :

'கழியுளார்' முதலியன வேற்றுமைத் தொகை; 'கழிக்கண் உளார்' என்பனவாக ஏழாவது விரித்து உரைத்துக் கொள்க. 'காட்டுளா ரேனவும்' 'மண்ணுளா ரேனவும்' என்பது. சுழி, நீர்ச்சுழி; அறியார், முற்றெச்சம். வாய் வந்தன, வினையாலணையும் பெயர். 'அங்கிருக்கின்றார், இங்கிருக்கின்றாரென்று தொண்டர்கள் தம் வாய் வந்தபடியெல்லாஞ் சொல்லும் பழியுளார் போலும் ஆண்டவ' னென்பது பொருள்; ஆவது இறைவன் எங்கும் பொருந்தி நிறைந்தவ ரென்பது கருத்து.

இன்று நன்று நாளைநன் றென்று நின்ற விச்சையால்
பொன்று கின்ற வாழ்க்கையைப் போக விட்டுப் போதுமின்
மின்ற யங்கு சோதியான் வெண்ம திவி ரிபுனற்
கொன்றை துன்று சென்னியான் கோடி காவு சேர்மினே.

'நின்ற இச்சையா' லென்க. அருணெறியைச் சேர்தற்கு இன்று நன்று நாளை நன்று என்று நாள் தள்ளுகின்ற உலக விச்சை யென்பது. அவ் விச்சையால் வாழ்க்கை பொன்றுதலின், அதனைக் கழிய விட்டுச் 'சென்னியானது கோடிகாவு உடனே சேர்மினென' அறிவுறுத்திய வாறும்; தயங்கல், அசைதல்; அன்றி ஒளிவிடுதலுமாம். மதியும் புனலுங் கொன்றையுந் துன்று சென்னியானென்று கொள்க. கோடிகாவு, திருக்கோடிகா வென்னுந் திருப்பதி. உகரம், சாரியை.

இளவழகனர்.

சமய குரவர்கள்

[திரு. மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்கள் B. A.]

சமயகுரவர் என்ற தொடர் மொழியானது 'சமயம்' 'குரவர்' என்னும் இரண்டு தனிமொழிகளால் ஆக்கப்பட்டது. சமயம் என்னும் நிலைமொழியானது குரவர் என்னும் வரும் மொழியுடன் சேரும் பொழுது நிலைமொழியிலுள்ள மகரவொற்றுக் கெட்டுச் சமய குரவர் என்றாயிற்று. சமயகுரவர் என்னும் பொருள் பற்றிய இக்கட்டுரையானது சமயம் குரவர் என்னும் இரண்டு பகுதிகளை யுடையதாகும். அவைகளை முறையே ஒன்றன்பின் ஒன்றாகக் கருதுவாம். அச்சொற்களின் கருத்துக்களும் அவ்வப்பகுதியில் இனிது விளங்கும்.

'சமயம்' என்பது நெறி அல்லது வழியாகும். எதற்கு வழி? என்னும் கேள்விக்கு இன்பம் அடைதலுக்கு வழி என்பது விடையாகும். உலகில் எறும்பு முதலிய சிற்றுயிர்களும் இன்பம் அடைதலையும் துன்பம் நீக்கத்தையும் விரும்புகின்றன. துன்ப நீக்கும் முயற்சியெல்லாம் இன்பம் அடைதலுக்கு நேர்ந்த தடையை நீக்கும் முயற்சியாகும். ஆறறிவுடைய மக்களும் அவ்வாறே

துன்பத்தினின்று நீங்கவும் இன்பத்தை அடையவும் விரும்பி முயற்சி செய்கின்றார்கள். மக்களது முயற்சிக்கு அடிப்படையா யுள்ள கருத்து துன்பம் நீக்கமும் இன்பம் அடைதலும்தான். பலதர அறிவுடைய மக்கள் துன்பம் நீக்கத்திலும் இன்பம் அடைதலிலும் ஒரே கருத்து உடையவர்களாயிருப்பினும் இன்பம் எது? என்பதைப் பற்றித் தங்கள் தங்கள் அறிவுக்குத் தக்கவாறு பல வேறு கருத்துகளையுடையவர்களா யிருக்கிறார்கள். மக்களில் ஒவ்வொருவனும் தான் எதை இன்பம் என்று தன் மனதில் நினைக்கின்றானோ அதனையே அடைய முயன்று வருகின்றான். மக்கள் பலர் குழுமி வாழும் இவ்வுலகில் இவ்வாறு முயற்சி செய்து வரும் பல மக்களும் ஒருவர் முயற்சிக்கு மற்றொருவர் தடைசெய்யாதபடி வாழும் வாழ்க்கை இன்னது என்று தங்கள் அநுபவத்தில் அறிந்துகொள்கிறார்கள். இவ்வாறு ஒருவன் முயற்சிக்குப் பிறர் தடைசெய்யாமலும் உதவி புரிந்தும் ஒருவரை யொருவர் நலியாமலும் வாழுகிற வாழ்க்கை முறையானது அறம் என்று கூறப்படும். அதற்கு எதிரிடையான முறையானது மறம் என்று கூறப்படும். உலக அறிவு வந்த மக்கள் ஒருவருக் கொருவர் மறம் தவிர்ந்தும் அறம் புரிந்தும் ஒழுகுகின்றார்கள். இவ்வாறு மக்கள் பல பிறவிகளில் உலக வாழ்க்கையை வாழ்ந்து இது இன்பம் இது இன்பம் என்று ஒன்றின் மேல் ஒன்றாக நினைந்து அதனை அதனைத் தங்கள் முயற்சியினால் அடைந்து அடைந்து நுகர்ந்து நுகர்ந்து அவை ஒவ்வொன்றிலும் தங்கள் மனம் அமைதி அடையாமல் உவர்ப்புக் கொள்கிறார்கள். அவர்கள் இவ்வாறு நூலறிவினாலும் உலக அநுபவ அறிவினாலும் நிலையில்லாத உலக இன்பங்களில் உவர்ப்பு அடைந்த பொழுது "உலகில் இப்படி உண்டு உடுத்துக் களித்து, உடலின்பம் நுகர்ந்து வாழும் வாழ்க்கைக்காகவா நாம் பிறந்தோம். இவ்வாழ்க்கையில் நிலையான இன்பம் அடையும்படி செய்கின்ற குறி ஒன்றும் இல்லையா" என்று தங்களுக்குள்ளே எண்ணி ஆராய்கின்றார்கள். இந்த ஆராய்ச்சி அறிவில் ஏன் இவ்வுலகிற் பிறந்தோம்? ஏன் இங்கே இருக்கின்றோம்? ஏன் இறக்கின்றோம்?; இறந்த பின் நாம் எங்கே போவோம்?; என்கிற கேள்விகள் பிறக்கின்றன. இக்கேள்வி

களுக்கு விடை கூற அவர்கள் ஆழ்ந்து நுணுகி ஆராயுங்கால் இந்த நிலையில்லாத உலக வாழ்வில் வந்த அநுபவத்தின் பயனாக நிலையான இன்பப்பேறு அடைதலே வாழ்க்கைக் குறியாக மக்களுக்கு அமைந்துள்ளது என்னும் உண்மையை அறிகின்றார்கள். நிலையான இன்பப்பேறு அடைதலாகிய இந்தக் குறியை அடைதற்கு வாய்ந்த நெறியே சமயமாகும். வாழ்க்கையில் குறி ஒன்று உளதாகத் தோன்றவே அதனை அடையும் நெறியும் இன்றி அமையாது வேண்டப்படுவதாகும். குறியும் அதனை அடையும் நெறியும் மக்கள் தங்களுடைய இயற்கை ஆராய்ச்சியிற் காணும் படியாகவே இயற்கை அமைப்புகள் அமைந்திருக்கின்றன. இவ்வாறு அறிவுடைய ஒருவன் நீண்டகால அநுபவ நிகழ்ச்சியில் இயற்கை அமைப்புகளில் காணும் நெறி அல்லது சமயத்தை யாவரும் எளிதாய் அறியும்படி ஞான ஆசிரியர்கள் உலகிற்கு வந்து அந்த அந்த இடத்திலுள்ள மக்களது அறிவு நிலைக்கு ஏற்றவாறு கூறியிருக்கிறார்கள். மக்களுடைய பழக்கத்தில் ஆசிரியர்களாற் கூறப்பட்ட சமய உண்மைகள் மறந்து விடப்பட்ட பொழுது பெரியவர்கள் உலகில் ஆங்காங்கே தோன்றி அந்த உண்மைகள் விளங்கும்படி மக்களுக்குக் கூறியிருக்கிறார்கள். இவ்வாறு கூறப்பட்ட சமயந்தான் மக்களுக்குக் காணப்பட்ட உலகத்தின் இலக்கணத்தையும் கண்ணாற் காணப்படாததும் ஊகித்து அநுமானத்தால் அறியப்படுவதும் ஆகிய உயிர்களது இலக்கணத்தையும் கடவுளது இலக்கணத்தையும் உணர்த்தும் உண்மைகளைக் கூறுகின்றது; சமயந்தான் உலக வாழ்வில் உடல் நலத்துக்கும் உயிர் நலத்துக்கும் ஏற்ற நன்மைகளை நாடவும் அவ்விரண்டு நலங்களுக்கும் கேடுபயக்கும் தீமைகளை விலக்கவும் மக்களுக்கு உணர்த்தவல்ல நீதி உண்மைகளைக் கூறுகின்றது. சமயந்தான் உலகவாழ்வில் இன்பதுன்ப வகைகளைப் பகுத்துக் கூறுந் தத்துவங்களை உணர்த்துகின்றது; சமயந்தான் மக்களுக்குத் துவக்கத்தில் உலக நெறியில் அடையக்கூடிய நெறிப்பட்ட சிற்றின்ப முறைமைகளையும் பின் ஞான நெறியில் அடையக்கூடிய பேரின்ப முறைமைகளையும் கூறுகின்றது. சுருங்கக் கூறில் சமயந்தான் மக்களுக்கு இம்மை இன்பம் மறுமை இன்பம் வீட்டின்பம் ஆகிய

மூன்று இன்பங்களையும் அவ்வக்காலங்களில் அடைவிக்கிறதற்கு வழி காட்டியாய் அமைந்து உள்ளது. இந்த உண்மை காண்டல் கருதல் உரை அளவைகளுக்கு ஒத்ததாயுள்ளது. இந்த உண்மையை இக்காலத்தில் உலகிலுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள நாகரீக மக்கள் அறிந்து அந்த அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு சமயத்தின் வழி ஒழுகுகின்றார்கள். நாகரீகமில்லாத மக்களுக்குத்தான் தற்காலத்தில் சமயமில்லை. நமது இந்திய நாட்டிலுள்ள இந்து மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நாகரீகம் அடைந்தவர்களாய்ச் சமய உண்மைகளை அறிந்திருந்தார்கள். நமதுநாட்டிலுள்ள சமய நூல்களும் கோயில்கள் மடங்கள் போன்ற சமயஅமைப்புகளும் பெரியோர்களும் வேறு எந்தநாட்டிலுமில்லை. அதனால் நமது நாட்டைச் சமயநாடு (land of religion) என்றும் ஞானபூமி (land of wisdom) என்றும் பெரியோர் கூறுவார்கள். சமய அமைப்புகளும் சமயப் பழக்கங்களும் மலினப்பட்டு இக் காலத்தில் தாழ்ந்த நிலைமையிலிருப்பன என்பது உண்மையே. அவைகள் சீர்திருத்தஞ் செய்யப்பட வேண்டும்; அவைகளை அழித்தல் தகாதசெயல் ஆகும்.

உண்மை இப்படியிருக்க "சமயம் வேண்டாம்" என்று இக் காலத்தில் நமது நாட்டில் சுயமரியாதை இயக்கத்தார் கூறும் கூற்று எவ்வளவு அறியாமை? சமயம் வேண்டாம் என்று கூறினால் நமது இந்து மக்களுக்கு உலக வாழ்வில் வழி காட்டியாயுள்ளது எது? தொன்மை நாகரீகமுடைய நமது நாட்டுப் பெரியோர்கள் காட்டிய வழியைக் கைவிட்டு இப்பொழுது நாம் எந்தப் புதிய முறையைக் கைக்கொண்டு ஒழுகுவது? மேற்கு நாட்டு வாழ்க்கை முறை வேறு; நமது தமிழ் நாட்டு வாழ்க்கை முறை வேறு. அவர்கள் நாகரீகப்போக்கு நமது நாட்டுக்கு இணக்கமுள்ளதன்று. அவர்களுள் அறிஞர்களும் ஆன்மஞான முறையில் நமது நாட்டுப் பெரியார்கள் கூறிய இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், முதலிய அட்டாங்கயோக முறைகளைக் கைக்கொண்டு வருகின்றார்கள். அவர்களுடைய உலக ஞான முறையும் நமது நாட்டு வாழ்க்கைக்கும் நமது நாகரீகப் போக்குக்கும் முற்றிலும் இணக்க

முள்ளதன்று. சுயமரியாதை இயக்கத்தார் நமது தமிழ் மக்கள் எந்தக் குறியையும் நெறியையும் பின்பற்றி ஒழுகல் வேண்டுமென்று சொல்லுகிறார்களோ? அல்லது ஒரு குறியும் வேண்டாம் ஒரு நெறியும் வேண்டாம் என்று சொல்லுகிறார்களோ? தெரியவில்லை.

இனி உலகில் பல சமயங்களுள்ளன. பலதர அறிவுடைய மக்களுக்கு ஏற்பப் பலதரச் சமயங்களும் வேண்டப்படுவனவே. அவைகள் கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள்களுள் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பொருள்கள் உண்டு; அல்லது இல்லை என்றும், அம்முப்பொருள்களின் இலக்கணங்களையும் அவைகளில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கு முள்ள தொடர்பையும் உயிர் கடவுளை அடையும் பயிற்சி முறைகளையும் கூறுகின்றன, அவற்றுள் சைவ சமயம் ஒன்று. ஆனால் சைவ சமயந் தவிர ஏனைய சமயங்களெல்லாம் ஒவ்வொரு தத்துவத்தை முடிவிடமாகவும் அதற்குத் தக்கவாறு முப்பொருள்களின் நிலைமையையும் கூறுதலில் ஒவ்வொரு பகுதி உண்மையைக் கூறுகின்றது. சைவசமயமோ முப்பத்தாறு தத்துவங்களைக் கூறி அவைகளுக்கெல்லாம் மேலாகக் கடவுளது உண்மை நிலையையும் முடிந்த உண்மையையும் (Ultimate truth) கூறுகின்றது. சைவ சமயத்துக்கு ஏனைய சமயங்களெல்லாம் அங்கங்களாகவும் படிகளாகவும் அவைகளுக்குச் சைவ சமயம் அங்கியாகவும் முடிவிடமாகவும் உள்ளது. சைவ சமயமானது ஏனைய சமயங்களுடன் பிணங்காமல் அவைகளைத் தனது அங்கங்களாகத் தன்னகத்தே தழுவிக்கொண்டு சகோதர உரிமையுடன் நோக்குகின்றது. இவ்வாறு சைவ சமயம் இருப்பதனால் சமயம் என்னுஞ் சொல் சைவ சமயத்தையே சிறப்பாகக் குறிக்கின்றது.

வேதம் பொதுவாக எல்லாச்சமயங்களும் கூறிச் சைவ சமயமும் கூறுகின்றது. ஆகமம் சிறப்பாகச் சைவ சமயம் ஒன்றையே கூறுகின்றது. வேதம் என்னுஞ்சொல் வித்து என்னும் வேரிலிருந்து வந்தது. அது அறிவு என்று பொருள்படும். "விச்சுக்கேடு பொய்க்காகா வென்றிங்கெனை வைத்தாய்" என்னும் திருவாசகப்பாவில் விச்சு (வித்து என்னும் சொல்லினது போலி)

என்னும் சொல் அறிவு என்னும் பொருளில் வந்தது காண்க. வேதம் என்பது அறிவு நூலாகும். ஆகமம் என்ற சொல் லினது வேர்ப்பொருள் பெரியோர்களிடமிருந்து வந்தது என் பது. ஆகமமும் அறிவு நூலாகும். ஆதலின் ஆகமத்தையும் வேதம் என்று கூறுதலுமுண்டு. வாக்கும் மனமுங் கடந்த வெளியில் முத்தான்மாக்களிடத்தில் விளங்கும் பேரறிவுப் பெருஞ்சுடர் சாந்தியாதீத கலையில் இன்பம் நுகரும் நாதமூர்த்தி கள் விந்துமூர்த்திகளிடம் நாதப்பே ரொளியாய் விளங்கி ஆன் மாக்களினது அறிவைத் தடை செய்யும் ஆணவமல வலியை முற்றும் அடக்கி வலி குறையச்செய்து திருவருட்சத்தியினது விளக்கத்தை உண்டு பண்ணுகின்றது. இந்த நாதப்பே ரொளியே முத்தான்மாக்கள் வாயிலாகத் தீவிரதர சத்திநிபாத ஆன்மாக்களிடம் விளங்குகின்றது. ஓங்காரத்தினது அகர உகர மகாரவிந்து வடிவங்கள் நான்கும் நான்கு வேதங்களாகும்; ஓங்காரத்தின் ஊர்த்துவ பாகமாகிய நாதவடிவங்களானவை ஆகமங்களாகும். வேதம் உலகர்க்கு உணர்த்தும் பொது நூல்; ஆகமம் சத்திநிபாதர்க்கு உணர்த்துஞ் சிறப்பு நூல். வேதத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்று நான்கும் கூறப்பட் டுள்ளன. ஆகமத்தில் வீட்டு நெறி யொன்றே சிறப்பாய்க் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவன் முத்தான்மாக்கள் வா யிலாக அறிவிக்குங் கருத்துக்கள் எந்த மொழியிலுங் கூறப் படலாம்; எழுதவும் படலாம். தமிழிலுள்ள பன்னிருதிருமுறை நூல்களும் பதினான்கு சித்தாந்த நூல்களும் சிறப்பான வேதங் களே. வடமொழி வேதாகமங்களிலுள்ள விழுமிய உண்மைக ளெல்லாம் பன்னிரு திருமுறை நூல்களிலும் பதினான்கு சித்தாந்த நூல்களிலும் அடங்கியுள்ளன. இந்த வடமொழி தென்மொழி நூல்களை யெல்லாம் நாம் பொதுவாக இறை வனது அருள் விளங்கும் அறிவு நூல்களென்று சொல்லலாம். இந்த அறிவு நூல்களெல்லாம் ஒரு வகுப்பு மக்களுக்கன்றி எல்லா மக்களும் உய்தி அடையும் பொருட்டுக் கூறப்பட்டன வாதலின் யாதாமொரு வகுப்பு மக்கள்தான் அவைகளை யோத லாம் கேட்கலாம் என்பது இடைக்காலத்தில் வந்த சாதிக்

கட்டுப்பாட்டு உரையே அன்றி உண்மை உரை அன்று. அவைகளினுள்ள கருத்துக்களை யார் ஓதியுங் கேட்டும் பயன் அடையக் கூடியவர்களே. அவைகளை யோதற்கும் கேட்டற்குந் தகுதியுடையவர்களே.

மேற் பகுதிகளிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் சிவஞான சித்தியாரில்

ஓதுசமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசமயம் பொருணூல் யாதிங் கென்னில்
இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினு லிவையெல்லா மருமறையா கமத்தே
அடங்கியிடு மவையிரண்டும் மரனடிக்கீ ழடங்கும்.

[அரனடி—திருவருட்சத்தி]

என்றும், திருமூலர் திருமந்திரத்தில்

வேதமொ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.

என்றும் கூறியருளினார்கள்.

இனிக் குரவர்கள் என்ற இரண்டாவது பகுதியைக் கருதுவாம். குரவர் எனப்படுவார், இறைவனுடைய அருட்சத்தி நிறைவாய் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள். அவர்கள் நான் என்னும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றும் முழுவதும் நீங்கப்பெற்றவர்கள். படலத்தினுற் கண்ணொளியிழந்த குருடன் படலம் நீங்கப்பெற்ற பொழுது சூரியனைப் பார்த்தல்போல மலம் முற்றிலும் நீங்கப்பெற்று இறைவனைத் தங்களது அருட்கண்ணுற் பார்க்கப் பெற்றவர்கள். தங்களுக்கென அறிவு வேட்கை செயல்களில்லாதவர்கள். ஒருயிர்க்குக்

கைகால் முதலிய உறுப்புகள் அவ்வுயிர் விரும்பியபடி தொழிற் செய்தல்போல் இறைவனுக்கு அவன் விரும்பிய தொழிலைச் செய்ய அமைந்த கருவியாயுள்ளவர்கள். பேய் பிடியுண்டான் தான் செய்யுந் தொழிலெல்லாம் பேயின் தொழிலாகவே செய்தல் போல் தாங்கள் செய்யும் அறிவு வேட்கை செயல்களெல்லாம் இறைவனது அருள் வயப்பட்டு நின்று செய்கிறவர்கள். நெருப்பைச் சேர்ந்த ஒரு கருநிறமான இரும்புத்துண்டு சிவந்த நிறமுள்ள நெருப்பேயாய் அந் நெருப்புக்குரிய சூடு முதலிய குணங்களை அடைதல் போல இறைவனுடன் இரண்டறக்கலந்து அவனுக்குரிய எண் குணங்களையுந் தங்களிடத்தில் பொருந்தப் பெற்றவர்கள்: இறைவனது திருவடி நிறைவில் அடங்கிப் பேரின்ப முற்றிருப்பவர்கள்.

இத்தகைய குரவர்கள் சந்தான குரவர்கள் என்றும் சமய குரவர்கள் என்றும் இருவகைப்படுவார்கள்.

சந்தான குரவர்கள்: சந்தானம் என்பது தொடர்ச்சி; குருபரம்பரையில் ஒருவர்பின் னொருவராய்த் தொடர்ந்து வரும் மரபில் உள்ள குரவர்கள். சந்தான குரவர்கள் அவர்கள் பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு ஞானோபதேசஞ் செய்து வீட்டு நெறியில் ஒழுகச்செய்து பேரின்பப்பேறு அடையச் செய்கிறவர்கள். மெய் கண்டான் மரபில் மெய் கண்டான், அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் என்னும் நால்வரும் சந்தான குரவர்கள். வேறு திருமூலர் மரபுமுதலிய மரபுகளும் அவற்றின் து வழியில் வருஞ் சந்தான குரவர்களும் உள.

சமய குரவர்கள்: சமயத்தை விளக்கவந்த குரவர்கள் சமய குரவர்கள் ஆவார்கள். குரவர்கள் என்பது ஆசாரியர்கள் அல்லது பெரியார்கள். அவர்கள் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர்கள். அவர்கள் சமய உணர்ச்சி குன்றி மல இருள் அடர்ந்து அதனல் மக்கள் அறிவு கலங்கி உணர்வு அழிந்து தீய வழிகளிற் செல்லுங்காலங்களில் அவர்கள் மக்கள் உய்யுமாறு உலகிற்கு வந்து சமய

உண்மைகளை உணர்த்தினார்கள். சைவ சமயம் முன்னே உலகில் அமைந்திருந்தாலும் மக்கள் சைவ சமய உண்மைகளை மறந்து உலகவாழ்வில் காமம் வெகுளி மயக்கங்களில் ஈடுபட்டு அருள்நெறி கடந்து ஒழுகுங்கால் சமய குரவர்கள் இறைவனது அருளால் இயக்கப்பெற்று உலகில் வந்து பிறந்து மக்களுடன் மக்களாய் வாழ்ந்து பல இடங்களுக்குஞ் சென்று அங்கேயுள்ள திருக்கோயில்களில் மூர்த்திகளைப் பாடி அம் மூர்த்திகளிடத்து அருள் விளங்கும்படி செய்தார்கள். அப்படிப் பாடப்பெற்ற இடங்கள் எல்லாம் "பாடல்பெற்ற தலங்கள்" என்று சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவர்கள் பாடிய தேவாரம் திருவாசகப் பாடல்களெல்லாம் இறைவன் அவர்களிடமாக நின்று பாடிய அருட்பாடல்கள். அவர்கள் பல இடங்களிற் செய்த அற்புதங்களெல்லாம் இறைவன் அவர்களிடமாக நின்று செய்த அற்புதங்களேயாம். அந்த அற்புதங்களுக்குத் தேவார திருவாசகங்களில் அகச்சான்றுகளும் அற்புதங்கள் நிகழ்ந்த இடங்களில் புறச்சான்றுகளுமுள்ளன. தேவார திருவாசகப் பாடல்களெல்லாம் "கச்சியே கம்ப னொற்றியூ ருறையு மண்ணுமலை யண்ணல் விளம்புவா னெனதுரை தனதுரையாக" என்று திருஞான சம்பந்த சுவாமிகள் திருஇலம்பையங் கோட்டூர்ப் பதிகத்தில் பாடியபடி இறைவன் சமய குரவர்களிடமாக நின்று பாடிய பாடல்களாதலினால் அருள் விளங்கும் பாடல்களாயுள்ளன. ஒரு பெரிய ஏரியிலுள்ள தூய நீர் ஒரு சிறு குழாய் வழியாய் ஓர் ஊருக்கு வந்து அவ் வூரிலுள்ள மக்களுடைய நீர் விடாயைத் தீர்ப்பதுபோல் இறைவனிடம் நிறைந்துள்ள அருள் வெள்ளம் தேவார திருவாசகப் பாடல்களாகிய குழாய் வழியாய் வந்து அருட்டாக முடைய மக்களுக்கு இப்பொழுதும் அருட்டாகத்தைத் தீர்க்கின்றது. அருட்டாக மில்லாதவர்கள் அத் தேவார திருவாசக அருட்பாடல்களை யோதிப் பயன் அடையார்கள்.

சமய குரவர்கள் நால்வர்களில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரு காலத்திலிருந்தவர்கள். அவர்கள் காலம் கி. பி. ஏழாவது நூற்றாண்டு, சுந்தரர் இருந்த காலம்

கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு. மாணிக்கவாசகர் இருந்த காலம் கி. பி. மூன்றாவது நூற்றாண்டு என்று ஊகிக்கப்படுகின்றது. சமய குரவர்கள் நமது நாட்டில் தோன்றிச் சைவ சமய உண்மைகளை உணர்த்தின காலத்தில் வாழ்ந்து வந்த மக்கள் உருவமில்லாத இறைவனை உருவமுள்ள அவர்களிடம் கண்டு வணங்கி யின்புற்றார்கள். அவர்கள் காலத்துக்குப் பின் இக்காலத்தில் வாழ்ந்திருக்கிற நாம் அவர்கள் பாடிய தேவார திருவாசக அருட்பாடல்களைப் பண்ணுடன் ஓதி அவைகளிலடங்கியுள்ள கருத்துக்களை அறிந்து உணர்ந்து உருகி அன்பினால் அழுது அரற்றி இன்பம் அடையலாம். இக்காலத்தில் சைவர்களாய்ப் பிறந்த பலர் சைவ சமய ஒழுக்கில் தலை நின்று தேவார திருவாசகங்களை யோதி யின்பம் அடையாதிருப்பது என்ன பரிதாபம். அவர்களுக்கெல்லாம் எல்லாம்வல்ல இறைவன் அவ்வின்பம் அடைதற்கு முயல ஊக்கம் அளிப்பாராக.

சீவக சிந்தாமணி

[நூல்நலங் காண்போன்]

(சூ௩க-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாது மேன்மை:— அரசர்கள் கடவுட் டன்மையுடையவரெனவும் அவர் தேவரினும் பெரியரெனவும், அவர் உறங்குவாராயினும் அவரொளி யுலகைக் காவாநிற்கு மெனவும், அவராணையைக் கடந்து நடந்தவர் இடும்பை நோய்க்கும் நரகத்திற்கு மிரையாவாரென்வும், அரசு முறைமை பிறழுமாயின் 'இவ்வுலகு கோள் நிற்கு நிலை குலைந்து இராநாழிகை குறையப் பகற்பொழுதுகள் மிக்கு மாரியின்றாய் நிலம் விளைவு சுருங்கிப் பசிமிக்கு மகளிர் கற்பழிந்து அறச்சாலைகளு மின்றிக் கெடும் எனவும் எண்ணியிருந்தனர். அரசர்க்கிருந்த அதிகாரமும் மிக அதிகமெனல் தெரிகின்றது. அவரிடம் நெருங்கிக் குற்றங் குறைகளை யெடுத்து

ரைப்போர் மிகத் துணிந்தவரா யிருந்திருத்தல் வேண்டும். தம்மை யொருவன் வாழ்த்துவனாயின் அவனை யருளி யாக்கலும் தம்மை யொருவன் வைவனாயின் அவனை யருளாதழித்தலும் அவர்களுக்கு அப்பொழுதே யாகுமெனவும், மன்னருடைய கோபம் தீங்கு செய்தவர்களைத் திரண்ட சுற்றத்தோடுஞ் சுடும்; அவரது அருள் அவரை விரும்புவாருண்டாயின் அமுதுபோ லுறுதி பயக்கும்; அவரது செற்றம் விரும்பாதார்க்கு நஞ்சுபோற் கரந்து நின்று கொல்லும் எனவும், மன்னர்களான் வரு நவையை அஞ்சுவார் அவர் காய்வனவற்றை யுவமை கூறு மிடத்துங் கூறார் நினைப்பதுஞ் செய்யார் எனவுங் கூறப்பட்டுள்ளது. இங்ஙன மாயினும் இக்காலத்தேயும் அமைச்சர் மாத்திரம் நூல் வழக் கறிந்தவராதலின் அரசனிடத்துத் தீயன கண்டால் இடித்துக் கூறி வந்தன ரென்ப தறிகிறோம்.

அரசனறங்கள் : அரசரும் மற்றையோரும் பொதுஜன நன் மை குறித்து யாவருக்கும் விலக்குதலில்லாத அடிசிற்சாலை முத லியனவும், தண்ணீர்ப்பந்தரும் வித்யாசாலைகளும் ஏற்படுத்தி அறத்திற்காக இறையில் நிலங்களும் (சர்வமாந்யம்) கொடுத்து வந்தார். முற்காலத் திருந்த குறைகளிற் பல தற்காலத் திலவாயி னும் அத்துணை யறஞ்செய்தல் இக்காலத்திலில்லையென்றே சொல் லல்வேண்டும்.

அரசன் பொழுது போக்கும் வகை

அரசன் விளையாடுவதற்காக அரண்மனையை யடுத்து ஓர் காவிற் சோலையும், அச்சோலையில் அவன் உறைவுதற்காகப் பள்ளி மாட மண்டப மொன்றும் செய்குன்றுகளும், உத்தியானவனங்க ளும் இருந்தன. கூத்தினரவமும் பாட்டினரவமும் முழவினரவ மும் யாழினரவமுமாகிய குறைதலில்லாத ஓசையாலே அரசர்க்கு நாள்கடோறு நாள்கழியா நின்றது. நகரத்தருகே கடல் கப்பல் முதலியவற்றைச் சமைப்பித்து விளையாடுதலு மிவர்க்கியல்பு. இவ்வரசர்க்கு அகப்பரிவார மகளிராகிய அரசச் சுற்றத்தாரு டைய குழாங்களும் (ஐஞ்ஞூற்றுவர்) நிருத்த கீதவாச்சியத்திற் குரிய மகளிரும் காம மொழிந்த நுகர்ச்சி கொடுத்தற்காக இருந்

துளர். இன்னும் பல போகமங்கையரும் (ஐஞ்ஞூற்றுவர்) இருந்தனரென்பது புலப்படுகின்றது. 'மயிலின்றன்மையார் என்றது பன்மையாற் றேவியர் பலராயிற்று' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவதினால் இஃதறியப்படும். இங்ஙனம் இவ்வரசர்கள் உண்மையில் நல்லரேயாயினும் சிற்றின்பத்தின் மூழ்கிக் காமமென்னும் பெரும்பகைவனைத் துரத்த ஆற்றலற்றவராய்த் துறத்தற்கரிய வேட்கை மிகுதியினாற் றமது அரசிய னெறியினின்றும் வழுவித் தாம் வீணே காலங் கழித்துத் தமது பகைவரால் வெல்லப்பட்டொழிந்ததே யன்றித் தம்மைச் சார்ந்தோர்க்குந் தமது குடிகளுக்கும் பெரியதோரிடர்ப்பாட்டை விளைவித்தனர். இவரெல்லாம் ஊழ்க்கோளே பெரிதெனக் கொண்டு தமதறிவினைப் பயன் படுத்தாது வாணாள் வீணாள் போக்கினர். ஐயகோ! இவருக்கு இவ் வறிவு ஒன்றுமாத்திரம் இருந்திருக்குமாயின் நமது தேயம் எத்துணைச் சிறப்புற்றிருக்கும். அங்ஙனமாயின்,

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்"

எனவும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

எனவும் நீதிநூலார் வாளாது கூறினாராலோவெனின், அற்றன்று; அவர் இவ்வாறுரைத்தது பேரவாவினை யறுத்தல் வேண்டும் எனவற்புறுத்துதற்கேயாமென்க. அன்றியும் இத்தகைய [illegible]டா வெழுப்புவோர் அவர்தாமே,

" அறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்"

எனவும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

எனவுங் கூறுவதனை அறியாரென விடுக்க.

போர்க்கருவிகள் முதலியன

அரசனுக்கு யானை முதலிய நால்வகைச்சேனைகளு மிருந்தன. படைவீரர் பழகுவதற்காகத் தேரேறு மிடங்களும் குதிரை யேறு மிடங்களும் வாட்டொழில் செய்யு மிடங்களும் விற்றொழில் செய்யு மிடங்களுமிருந்தன. வில்லும் வேலும் வாளுமே இவரது முந் திய ஆயுதங்கள். குந்தம் சக்கிரம் முதலிய ஆயுதங்களுமிருந்தன. தமது மெய் வாள் முதலிய படைகளால் ஊறுபடாமலிருந்ததற்குக் கேடக மென்னு மெய்காப்புக் கருவியும் உபயோகித்தனர். இக் கருவி கரடித்தோலாற் செய்யப்பட்டதென்பது தெரிகிறது. புலித்தோலாற் செய்த கவசத்தை வீரர்களணிந்து கொள்வது வழக்கம். வாகனங்களிலேறாத வீரர்கள் கவசம் பூணுதல் மரபன்று. விளையாட்டுக்களுள்ளே யானைச் செண்டு குதிரைச் செண்டு என இரண்டுவகையுண்டு. இவையாடும் முற்ற வெளியைச் செண்டு வெளியென்ப. யானைப்போர் அக்காலத்து மிக்கிருந்ததுபோலும். யானைகள் நெருங்கி வந்து போர் செய்யாமலிருத்தற்கு இரும் பால் யானை நெருஞ்சி முள்ளாகப் பண்ணிய கப்பணமென் னுங் கருவிகளைச் சிதறுவார்கள். யானை மருப்பை யறுத்துக் கூர் மையிட்டு அது வலிகொள்ளும்படி கிம்புரியென்னும் பூணிடுவார் கள். நகரின் மதிலைச் சார யானைக்கூட்டங்கள் இருந்தன. மதிலுக்கு உள்ளேயும் புறத்தேயும் ஆழமான அகழிகளிருந்தன. புறத்தே அகழியினின்றும் கோயிலகழிக்கு நீர் வருவதற்காகக் கால்வாய்கள் செய்யப்பட்டிருந்தன. வீதியிற்செல்லும் யானைகள் தன்னுள் வீழா திருத்தற்பொருட்டு இது மேலே மூடப்பட்டிருக்கும். இக் கரந்த கற்படை கரந்துபடையெனவும் கரந்துறை யெனவும் வழங்கும். இம்மதிலிலே பலவகைப் பொருள்களிருந்தன வென்பதும் அவை யவனரால் இயந்திரிக்கப்பட்டன வென்பதுங் கூறப்பட்டுள. யுத் தத்திற்குச் செல்வோர் பலவகை மாலை சூடிக்கொள்வது. வழக்க மென்பதறிகிறோம். இதனை

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன் றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி

"யதுவளைத்த லாகு மூழினை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்"

என்ற கலிவெண்பாவானு முணர்க. படைகளுக் கஞ்சிக் கண்ணிமைத்தல் தோல்விக்குறி யென்பதூஉம் சுத்த வீரர்கள் அங்ஙனம் இமையா ரென்பதூஉம் இவர் கொள்கை. இதனை

"விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு"

என்னுந் திருக்குறளானு மறிக. போர்க் களத்தின் முகநோக்கி வீழ்தல் வீரக் குறிப்பெனவும் அங்ஙனம் ஓரரசன் வீழ்வானுயின் அவன் சந்ததியாரேனும் பிற் காலத்திற் பகை வென்று இராச்சியாதிகாரத்தை மீளவும் பெறுவரெனவும் எண்ணியிருந்தனர். அரசன் தனது மனைவியை முன்னே போக்கிப் பின்னர்த் தான் யுத்தத்துக்குப் போகுதல் முறைமையென் பதூஉ மிவர் கொள்கை.

பெண்கள் நிலைமை:—இனி யிக்காலத்தே பெண்களுக்கிருந்த உரிமையையும் அவர் நிலைமையையுஞ் சிறிது கவனிப்பாம். இப்பொழுது தொம்பரச்சிகள் என வழங்கும் பெயரினையுடைய கழைக்கூத்தியர் அக்காலத்தே மிக்கிருந்தனர் போலும். அவர் கயிற்றிலே குதித்துக் கலனொலிப்ப ஆடுங் கூத்தைத் தேவர் செவ்வியதோரிடத்து உவமையாக் கூறுகிறார். அது வருமாறு:—

"கூடினார்க ணம்மலர்க் குவளையங் குழியிடை
வாடுவள்ளை மேலெலாம் வாளையேறப் பாய்வன
பாடுசால்க யிற்றிற்பாய்ந்து பல்கலனொ லிப்பப்போந்
தாடுகூத்தி யாடல்போன்ற நாரைகாண்ப வொத்தவோ"

இவ்வாறே

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றிற் - போர்நீள்

கழைக்கோ தைய ரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோத்த மானேயிம் மன்"

எனப் புகழேந்திப்புலவர் கூறுவதுங் காண்க.

பெண்கள் கமுக மரத்திலே கயிற்றை நாலவிட்டு அதைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுவது வழக்கம். இதனை "ஊசலாடு பைங்கமுகு" என்றதனானும்,

"கோழ ரைம்ம ணிமடற் கூந்த னெற்றி யேந்திய
மாழை யந்தி ரன்கனி மாம ணிம ரகதஞ்
சூழ்கு லைப்ப சுங்கமுகு சூலு பாளை வெண்பொனு
லூழ்தி ரண்ம ணிக்கயி றூச லாட விட்டதே"

என்றதனானு மறிக. மகளிர் பந்தாடுவது வழக்க மென்ப தறிகின்றோம். பந்தாடுவதற்காகவே சில விடங்களுமிருந்தன. பந்தாடலின் விகற்பங்களும் பலவாறாகக் கூறப்பட்டுள. அவை யார்வமுடையார் பலர்க்கும் விருப்பந் தருவனவேயாமெனத் துணிந்தே மாதலின் ஈண்டுக் கூறுதும்.

"வைத்த பந்தெ டுத்தலு மாலை யுட்க ரத்தலுங்
கைத்த லத்தி னோட்டலுங் கண்ணி நெற்றி தீட்டலும்
பத்தி யிற்பு டைத்தலும் பைய ரவி னாடலும்
இத்தி றத்த பந்தினோ டின்ப மெல்லை யில்லையே."

(இதன் பொருள்) :—பந்தைக் கையாற் றொடாதே காலாலே தட்டி யெடுத்தலும் கரத்தலும் கையிலே கொள்ளலும் செவல் வோட்டுதலும் கண்ணியையுடைய நெற்றியாலே தீட்டுதலும் ஒரு காலைக் கொருகா லுயரப் பத்தியாகப் புடைத்தலும் தாம் நிலையிலே நின்று அரவு போலப் பந்துலாவுதலுண்டாம்படி புடைத்தலு மாகிய இக் கூற்றவாகிய அப்பந்தினோடுண்டான வின்பம் முடிவில்லை யென்க.

இப்படியே விமலையா ரிலம்பகத்தில் விமலை பந்தடித்தாளென்னும் பொழுது கூறப்பட்டுளது. அரசனிடத்தே தமக்குரிய துறைகள் முற்றக் கற்று அவையிலே யாடுதலுடைய

அரம்பை யன்னார் ஐஞ்ஞூற்றுவர் இருந்ததாகக் கூறப்பட்டுள் ளதனாற் சில பெண்கள் நாட்டியம் பயின்றிருந்தார்களென்பது விளங்கும். அன்றியும் கூத்த நூலென்றே ஒரு நூலுண்மையுங் காண்க.

விலை மகளிர் :—“பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி, லேதில் பிணந்தழீஇ யற்று” எனத் தெய்வப் புலவரால் இழித்துரைக்கப்பட்டவரும் நிதியாகிய தசையைக் கைக்கொண்டு உடலைக் கைவிடுவோரு மாகிய வரைவின் மக ளிர் இக்காலத்துப் பற்பலரிருந்தனர். இஃது இராசமாபுர வருணனையிற் பரத்தையர் வீதி வருணனையால் அறியப்படும்.

பெண்கல்வி :—இனி யாம் அவசியம் கூறவேண்டுவதோர் விடய முளது. அஃது இக்காலத்திற் பெண் கல்வி நிராகரிக்கப் படாமற் பராமரிக்கப்பட்ட தென்பதே. இதனைத் தன்னைப் பிரிய வருந்திய விசையைத் தேற்றுவான் புக்க சச்சந்தன் கூற்றாக,

“வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வரமனால் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்றா லொழிகநின் கவலை யென்றான்.

எனத் தேவர் கூறுவதனா லறிக. இதனாற் சில பெண்களே னும் நூலாராய்ச்சியிற் பெரிதும் வல்லவராயும் கல்வியின் மிகத் தேர்ந்தவராயும் பேரறிவுடையராயு மிருந்தார்களென் பது பெற்றாம். பெண்கள் கல்வி கற்கவேண்டிய தவசியமோ என்பதைக் குறித்துத் தற்காலத்துத் தார்க்கிகர்கள் ஆங் காங்கு முழங்கக் கேட்ட யாம் சிலர் அது நமது தேயத்தின் நன்னிலைமைக்கு இன்றியமையாதென்பதைத் தெற்றென வறிந்தும் நம்முன்னோர்கள் இதனை யாதரித்து வந்தார்களென்பதை யறி யோமே; இதுகாறும் வழக்காறாகாத தொன்றை நாமெவ்வாறு நன்றெனக்கூறுவது என்றிங்ஙனம் பலவாறு ஆலோசித்து மாழ்கு கின்றார்களென்பதை யறிந்துளேம். தாம் நன்றென வறிந்ததை யுறுதிப்படுத்தற்கு ஏதேனும் வழியுளதோவென ஆவலுடன்

தேடாநிற்கு மவர்க்கு இஃதோர் மேற்கோளாகுக. சிலமகளிர் சங்கீதமும் நன்குணர்ந்திருந்தார்களென்ப தறிகிறோம். இங்ஙனம் அவர் நிலைமை பல விதத்திலும் மேம்பட்டிருந்ததென்பது நன்கு விளங்கும். பெண்கள் கடிப்பிணை, குழை, மகரம், வளை, ஆழி, மேகலை, கிண்கிணி, குறங்குசெறி, சிலம்பு, பாடகம் முதலிய அணிகளை அணிந்திருந்தார்கள். அவர் அக்காலத்திலணிந்திருந்த அணிகளிற் பல இப்பொழுது வழங்குவதில்லைபோலும்.

சிற்பத்தொழில்:—இனி யக்காலத்துச் சிற்பத்தொழில் முதலியவற்றைச் சிறிது கவனிப்பாம்; இவை பெரும்பாலும் இத்தேயத்தினரல்லாதவரும் யவன முதலிய மேற்றேசங்களிலிருந்து வந்தவரும் யவனரெனப் பெயர் பெற்றோருமாகிய கிரேக்கர்முதலியோரது தொழிலேயா மென்பதும்நமது தேயத்தார் அவைகளை நன்றாக அறிந்திலரென்பதும் விளங்குகின்றன. இவ் யவனத்தரசரே அக்காலத்துக் கம்மியத்தொழிலெல்லாஞ் செய்து வந்தனர் போலும். இவர் வேலையிற் சிறந்தவரென்பதை இராசமாபுரத்து அகநகர் மதிலிலே நூற்றுவரைக் கொல்லி, நூக்கி யெறிபொறி, துவக்கு சங்கிலி, விட்டேறு, பேய், பெரும் பாம்பு, கோணமா, விற்பொறி, விடுகுதிரை, தொடர்வாழ் கற்பொறி, பாவை அன்னம், மாடம், கொள்ளி, கொக்கு, கூகை, ஐயவித்துலாம், இருப்புப்பன்றி, நாகம், விடுசகடம், குரங்குதகர், அரிகயிறு, இவைகளும், எவ்விடத்துந் திரிந்து செம்புருகின நீரையுமிழ்வனவும், பகைவர் வேதற்குக் காரணமான உருகுவட்டை யுமிழ்வனவும், நெய்யை யுமிழ்வனவுமாகிய யவனர் இயந்திரித்த விசித்திரப்பொறிகள் பல அமைந்திருந்தனவாகக் கூறப்பட்டிருத்தலானும் கடைத்தெரு வருணனையிற் "பொன்யவனம்பேழை"யைச் சிறப்பித்துக் கூறுவதனானு முணர்க. அன்றியும் இவ்வாறே பெருங்கதையிலும், மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும், திருவிளையாடற்புராணத்திலுங் கூறப்பட்டுளது.

"தம்புலங்களால் யவனர் தாட்கடுத்த பொறியே"

எனத் தேவர் கூறுமாறுபோல,

"அமரரணெலா
மறிவிஞ னிறுவு கம்மியன் செயவு மரியவா யவனர் புரியுமாப்
பொறிகள் செய்யும் வினையினன்"

எனப் பரஞ்சோதி முனிவருங் கூறுதல் காண்க.

கப்பல் யாத்திரை:—இக்காலத்திற் சிலர் கப்பல் யாத்திரை செய்து வந்தார்களென்பதும் விளங்குகிறது. இராசமாபுரம் கடற்றுறை முகமெனக் கத்திய சிந்தாமணியிற் கூறப்பட்டுளது. புகாரினது ஆழத்தால் நகரளவுங் கலம் வந்ததென்றார் நச்சினார்க்கினியரும்.

இங்ஙனம் திருத்தக்கதேவர் காலத்து நாகரிகம் ஒருவாறு கூறப்பட்டது. இன்னும் சைனரது மதக்கொள்கைகளும் அக்காலத்துச் சனங்களது விருப்பு வெறுப்புகளைப் பற்றினவுமான பல வேறு வகையானவாய நுண்ணிய விஷயங்கள் அநேக முள்ளன. அவையெல்லாம் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. 'சீவகசிந்தாமணியாசிரியர் காலத்து நாகரீகம்' எனத் தலைப்பிட்டுக் கொண்டு சச்சந்தனது நாட்டு வளம் நகர்வளம் முதலாக அவன் சரிதத்தினின்றும் விஷயங்களை யெடுத்துரைத்தது எதனாலோ வெனின், நூல்கள் பலவற்றினும் அவ்வவ்வாசிரியரது காலத்து நாகரீகமே விளங்கிக் கிடக்குமென்னும் பெருநியதி பற்றி யென்க.

உடலுள வியைபு

[சி. என்,. சரவண முதலியாரவர்கள்]

ஆத்ம தத்துவ நூலை நன்கு கற்றறிந்தோர் உளத்தைச் சித்துப் பொருளெனவுங் கூறுகின்றனர். உடலுளமாகிய இவை தம்முளுள்ள இயைபினை நோக்கி முன்னர் இவற்றின் றன்மையை நோக்குதல் சால்புடைத்து.

இவ் வுள நூலைப் பயின்ற பலர் இவற்றின் றன்மையைத் தத்தம் மனதுக் கேற்பப் பல்வேறு வகையான் வறையறுத்துக் கூறுவாராயினர். இச் சாத்திரத்திற் றேர்ச்சி பெற்றவரு ளொரு

வராகிய டிச்செனர்* என்பார் 'மனமென்பது எண்ணம் உணர்ச்சி விருப்பம் ஆகியவற்றின் றொகுதியே' எனக் கூறியிருக்கின்றனர். இவ்வரையறையை யாம் ஏற்புடைத்தாகக் கொள்ளிற் பஞ்சேந்திரிய வாயிலான் யாமுணரும் சுவை பரிசம் ஒளி நிறம் முதலியவற்றின் றொகுதியையே சடப்பொருளெனக் கூறவேண்டியிருத்தல் காண்க. ஆனால் இச்சுவை பரிசமென்பன சடப்பொருளின் காட்சியேயென்பதும் ஒருபொருளின் காட்சியையே அப்பொருளாக மதித்தல் குற்றமென்பதுஞ் சிற்றறிவுடைய பேதையர்க்கு மெளிதிற் புலப்படும் விடயமே. சடப்பொருளின் றன்மையை நன்குணராத நாம் நாமுணருஞ் சுவை பரிசம் ஒளி நிற முதலிய காட்சியாற் சடப்பொருளென் றொன்றிருத்தல் வேண்டுமெனத் துணிதல்போல, மனத்தை நாம் நேரே பார்த்தலரிதாயினும் அதன் புறக்காட்சிகளாய எண்ணம் உணர்ச்சி விருப்பம் முதலியவாற்றான் மனமெனு மொன்றுண்டென நாம் துணிகின்றோம். ஆதலின் எண்ணம் உணர்ச்சி விருப்பம் முதலிய மனத்தின் காட்சியேயென்பதூஉம் மனமல்லவென்பதூஉம் பெற்றாம். பார்க்ளே† யென்னும் பெயரிய மற்றொருவர் இதனினும் பெரிதும் வேறுபடுவர். இவர் சடப்பொருளின்மையைக் கூறுவான்றொடங்கி, நாம் சடப்பொருளின் காரணத்தாலுண்டாவனவாய்க் கருதும் சுவை பரிசம் ஒளி நிற முதலியவை இப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்த முழுமுதற் கடவுளின் விருப்பத்தின் காரணத்தாலுண்டாவனவென முடியாநிற்பர்.

உடலுளமாகிய இவற்றின் றன்மையைக் கூறுமிடத்துப் பலர் பல்வேறபிப்பிராயத்தினரா யிருப்பினும் இவ்விரண்டின் கண்ணும் மிகவும் நெருங்கிய வொற்றுமை யுளதெனக் கூறுதல் யாவர்க்குஞ் சம்மதமாயிருக்கின்றது. இவ்வொற்றுமை யித்தகையதென வரையறுத்துக் கூறு முன்னர் இஃதுளதென யாவரு முணர்தற்குக் கருவியாய சில நியாயங்களை முன்னர்க் கூறுவாம்.

உடலிற்கு முளத்திற்கு மொற்றுமை யுளதெனத் தெரிவிக்கும் அத்தாட்சிகளுட் பல நம்முடைய அனுபவத்தினு லறியற்

*Titchenur †Berkeley.

பாலன: மானிடர் தம் வயதிற் கேற்ப முதிர்ந்த அறிவுடைய ராதலும் தத்தந் தேகநிலைக்குத் தக்க நுண்ணறிவுடைய ராதலுமே தேகத்திற்கும் மனத்திற்கு முள்ள வொற்றுமையைக் குறிப்பதற்குத் தக்க சான்றுவன காண்க. இவற்றுண் முதற்கூறியது யாவர்க்கும் தெரிந்த விடயமே. நாம் செய்யுங் காரியங்களுள் இவை செயற்பாலன, இவைசெயற்பாலன வல்லவெனத் தீர்மானிக்குந் திறன் குழந்தைகளிடத்திற் காண்கிலேம். இத்தகைய சக்தி மானுடர் வயது முதிர்ந்துழிப் பெறுவரேயன்றி, இளம்பிராயத்தின்கண்ணே பெறுதலிலர். பின்பு தக்க பிராயமடைந்துளோர்க்குங் குழந்தைகளுக்கு முள்ள வேற்றுமை யாது? அவர்கள் இக்குழந்தைகளைக் காட்டிலும் பருத்ததேகத்தை யுடையவர்களாதலு மன்றிப் புத்தி விசாலத்தை யுடையவர்களாதலுமன்றோ? இளம்பிராயத்திற் குழந்தைகள், நாமவர்களைத் தமக்குத் தீங்கு பயப்பனவற்றைச் செயச் சொல்லினும் அவற்றைச் சிறிதேனும் யோசியாது செய்து எளிதின் மோசம் போதலும், அவர்களே வயது முதிர்ந்துழி யித்தகைய தீச்செயல்களுக் கிணங்காராதலுங் காண்க. இவ்வுண்மை பெரும்பாலரிடத்திற் காணற்பாலது. நாகரீகமுங் கல்வியென்பதுஞ் சிறிதேனுமில்லாது அஞ்ஞானமாகிய விருளான் மறைக்கப்பட்டுள பேதையர்களிடத்து இவ்வுண்மையைக் காண்டலரிது. இவர்கள் வயது முதிர்ந்துழியும், மற்றவர்களைப்போலாது, குழத்தைப்பருவத்துள்ள பேதைத் தன்மையையே மேற்கொண்டு தங்காலத்தைக் கழியாநிற்பர். ஆதலினிவர்களுக்குங் குழந்தைகளுக்கு முள்ள அறிவினை நோக்குமிடத்துச் சிறிதேனும் வேற்றுமை யின்மை காண்க. பின்னர் இரண்டாவதுஅத்தாட்சியாக் கூறியதென்னையெனில், நமது புத்தியின் முயற்சியானது நந்தேக வியல்புக்குத் தக்கவாறுளதென்பதே. இது பற்றியே நாம் நோயினுற் றுன்புறு காலையில் நமது புத்தியையொரு காரியத்தின்கண்ணே மிகுதியுஞ்செலுத்தி அதற்குத் தக்க முடிவெய்தல் மிகவுமரிது. இஃதன்றி நாம் சக்தியற்று இளைப்பாற் களைத்திருக்குங் காலையில் எக்காரியத்தின்கண்ணும் நம் புத்தியைச் சிறிதேனு முபயோ

கித்தலரிதாதல் காண்க. அன்றியும் நமதுதேகக்கிளர்ச்சியானது காலைப்பொழுதும் மாலைப்பொழுது மதிகரித்துப் பகற்பொழுதிற் குறைதலையொக்க நம் உள்ளக் கிளர்ச்சியுங் காலைப்பொழுதும் மாலைப்பொழுதுமாகிய விரண்டிலு மதிகரித்துப் பகற்பொழுதிற் குறைகின்றது. இனி மேற்கூறிய வொற்றுமையைக் காட்டிலுங் தேகத்தி னோருறுப்பாய மூளைக்கும் மனத்துக்கு முள்ள வொற்றுமை மிகவுஞ் சிறப்புடைத்தென்பது பின்னர் வரும் அத்தாட்சிகளா னெளிதி லறியற்பாலது.

அவற்றுட் சில :—

(1) புதிதாய்ப் பிறந்த குழவியின் மூளையானது அதன் ஏழாமாண்டுவரையும் விரைவாகவும், பின்பு நாற்பதா மாண்டு வரையுஞ் சிறிது சிறிதாகவு மதிகரிப்பது மன்றி இப் பருவமடைந்த பின்னர்ப் பத்து வருடத்துக்கொரு முறை சிறிது குறைதலுமுடைத்து. மானுடர் தம் மூளையினளவுக்குத் தக்க புத்திவிசால முடைய ராவரென்பது அனேகருடைய கொள்கை. அறிவிலிகளுடைய மூளை மிகவுஞ் சிறிதென்பது யாவராலு மங்கீகரிக்கப்பட்ட விடயம்.

(2) நமது புத்தியை யொரு காரியத்தின்கண்ணே யூன்றி நெடுநேரம் நாம் யோசித்துக் கொண்டிருந்தால் இக் காரிய முடிந்த பின்னர் நமக்கு ஒருவித தலைவலி யுண்டாதலையும், நமது மூளையினிலைமை சிறிது வெப்பத்தினுலுயர்தலையுங் காண்கின்றோம்.

இவ்வித மிடைவிடாது நமது புத்தியைச் செலுத்துங்கால், அதற்கேற்ப நமது மூளையிலுதிரம் பரவுதற்கு வேண்டிய உணவு தேடவேண்டி யிருத்தலும், அற்றேல் நாம் புத்தியையுபயோகித்தலே அரிதாதலுங் காண்க.

(3) நமது மூளை பல பிரிவினை யுடைத்தாய்ப் பிரிவுகடோறும் பல பெயர்களினல் வழங்கப் பெறும். இவற்றுட் சிறந்தன சிந்தனைக் கருவி* தசையியக் கருவி† உயிர் நிலைக்

---

* Cerebrum. † Cerebellum.

கருவி* என்னுமிம் மூன்றே. இவற்றுண் முன்னையது தலையின் முற்புறத்தும் பின்னையது பிற்புறத்து முள. முற்புறத்துள்ள தாகிய ஸெரிப்ர மென்பது பல பிரிவினை யுடைத்து. நாம் இதன் முற்புறத்திற் றுக்குறின் ஞாபக சத்தியையும், பிற்புறத்திற் காட்சியையும் உச்சியில் விருப்பத்தையு மிழக்கின்றோம்.

(4) நாம் பகலினுழைத்தலா லுண்டா மிளைப்பினிமித்தம் இரவில் நித்திரை போகின்றோம். ஆயினும் நாமிரவிற் கண் விழிக்க வேண்டி யிருப்பின், அங்ஙனமே நமது விருப்பமானது தேகத் தளர்ச்சியை மேலிட்டு, இரவினுங் கண் விழிக்கச் செய்விக்கின்றது. இக் கண் விழித்தலால் நாம் கருதிய தொழிலைப் புரிவது மன்றி, அத்தொழிலில் நாமுபயோகிக்கும் புத்திக்குத் தக மூளையின்கண் இரத்தம் பரவுதலையு முடையோம். ஆதலின் நம் விருப்பத்தினால் மேற் கூறிய தொழில்களைப் புரிய வல்லோம்.

இத்தகைய அத்தாட்சிகளா லுடலிற்கு, மூளத்திற்கு மொற்றுமையுளதென யாவருமொருங்கே துணியினும், இச் சம்பந்த மித்தன்மைத்தென வரையறுத்துக் கூறுவதில் வேறு படுவர். இச்சாத்திர முணர்ந்த சிலர் உடலுளமாகிய விரண்டு மொன்றெனவும், சிலர் இவை பெரிதும் வேறுபாடுடைய இரண்டு வெவ்வேறு பொருள்களெனவும் மாறுய கொள்கையராவர். பெயின்† என்பவர் உடலுளமாகிய விரண்டும் வெவ்வேறுய இரண்டு தொழிலையுடைய ஒரே பொருளெனவும் ஹக்ஸ்லி‡ என்பவர் நாமெல்லோரும் அறியுந்தன்மையை யுடைய யந்திரங்களை யொப்ப மெனவும் இக்கொள்கையையே யுடைய வேறு சிலர் இவை ஒரு காகிதத்தினிரண்டு பக்கங்களை யொப்பவெனவுங் கூறுகின்றனர். ஆகையால் மேற்கூறியோர் உளத்தின் றொழிலும் யாக்கையின் றொழிலின்றியே மனத்தின்கண் விருப்பமும் நிகழ்தலானும், இம்மனம் யாக்கையாகிய விரண்டிற்கு முள்ள வொற்றுமையையே சிறந்த காரணமாக்கொண்டு இவர்தம் மதத்தினை நிலை நிறுத்துதலா

* Medulla Oblongata. † Bain. ‡ Huxley.

னும், இவர்தம் கொள்கை சால்புடைத்தன்றென்பது யாவரும் எளிதிலறியத்தக்கதே. இக்கொள்கையை மேற்கொண்டவர்களே இரண்டு பாகுபாட்டினையுடையராவர். ஒருசாரார் லோகாயத மதத்தினர் அல்லது, சடமாயா வாதத்தினரெனவும் மற்றொருசாரார் மானத பூசையை மேற் கொண்டாரெனவும் பெயர் பெறுவர்.

லோகாயத மதத்தினர் கொள்கை யாதெனில் உலகத்திலுள்ளது சடப்பொருளொன்றேயென்பதும் நாம் மனமெனக்கொள்வது இச்சடப்பொருளின் மற்றோருருவம் அல்லது பலனேயென்பதுமாம். இக்கொள்கையானது ஆத்ம தத்வ நூலைப் பிராணி நூலோடு ஒரு தன்மைப் படுத்துவதைக் காண்க.

அஃதாவது, ஈரல்* என்பது பித்தநீரைப் பிலிற்றல் போல மூளையானது எண்ணங்களைப் பிலிற்று நீர்மைத்தென்பதாம். இக்கொள்கைக்குக் கூற்றோர் பின்வரு மிரண்டாக்ஷேபங் கூறுவர்.

1. மூளையின் றொழிலானது நரம்பினோடு சம்பந்தப்பட்டுளதேயன்றி எண்ணங்களை நோக்குமிடத்துச் சிறிதேனுஞ் சம்பந்தப்பட்டில தென்பதும்.

II. இக்கொள்கையை நாம் ஏற்புடைத்தாகக் கொள்ளின் நம்மை யந்திரத்துக்கொப்ப மதிக்கவேண்டி நாம் சுயேச்சையாக ஒரு காரியத்தையுஞ் செய்யத் திறனற்றவர்களாகின்றோமென்பதைக் குறித்தலான், இஃதுண்மையன்றென்பதுமாம்.

பின்பு † மானத பூசையை மேற் கொண்டாரது கொள்கை யாதெனில் இப்பூமியிலுளது மனமொன்றே யென்பதும் நம் சடப்பொருளெனக் கூறுவது மனத்தின் வெளிபுருவமேயென்பதுமாம். இக் கொள்கையையே மாயாவாதமெனவுங் கூறுவர். இதுவு மேற்புடைத்தன்றென்பது பின்வருமாக்ஷேபங்களாற் புலப்படும்.

---

* Liver. † Spirutualism.

I. இக்கொள்கையை யாமுண்மையென மதிப்பின் வெளிப்பொருளின்றியே மனத்தின்கண் எண்ணம் நிகழுமெனக் கொள்ளவேண்டியிருத்தல் காண்க. ஆனல் நமதெண்ணம் வெளிப்பொருளின் காரணத்தானே யன்றி, தாமே யுதித்திலவென்பதை நம்முடைய அனுபவத்தினல் நாமறிகின்றேம்.

II. சடப்பொருளொன்றே பூமியின்கண் வியாபித்துளதெனக் கொள்ளின் மனத்தைக்குறித்து நமக்குள்ள வபிப்பிராயங்களும் வேறுபடாது. ஒரே பொருளினைக் குறித்து நமக்குண்டா மபிப்பிராயத்தை யொத்தல்லவோ இருத்தல் வேண்டும். அவையங்ஙன மில வென்பது யாவருமெளிதிலறியுந் தன்மைத்தே.

ஆதலின் ஏகேச்சுரவாத மேற்புடைத்தன் றென்பதூஉம் உடலுளமென்பன விரண்டும் வெவ்வேறு பொருள்களென்பதூஉம் பெற்றும். பிளேடோ * அரிஸ்டாடில் † ஆகிய இவர்களுக்கு முன்னிருந்தோர் இவ்விரு பொருள்களுஞ் சடப் பொருளின் றன்மை யுடையனவென்றெண்ணி யிருந்தனர். பிறகு பிளேடோ வென்பவ ரிக்கொள்கையின் குற்றத்தை வெளிப்படுத்தி இவற்றுண் மனத்தைச் சித்துப் பொருளெனவும் யாக்கையைச் சடப் பொருளெனவுங் கூறி, இவ்விரண்டும் வெவ்வேறு குணத்தையுடைய இருவகைப் பொருள்களென்னுங் கொள்கையை நிலை நிறுத்தினர்.

பின்பு இவ்விரு பொருள்களு மொன்றே டொன்றுெத்து நடத்தலைக் கற்றேர் பின்வருமாறு கூறுகின்றனர்.

I. மூளையி லுண்டாந் திரிபிற்குத் தகச் சடப்பொருளின் கண்ணுந் திரிபுண்டாதலா லிரண்டுமொப்ப நடக்கின்றனவென ஒரு சாரார் கொள்கின்றனர். இக்கொள்கையைச் சிறப்புடைத்தென மேற்கொண்டாருள் டேகார்ட் ‡ என்பவரும் அவர்தம் மாணுக்கரும் அடங்குவர். இவர் சித்துப் பொருளிற்கும் சடப்பொருளிற்கும் யாதொரு சம்பந்தமு மிலதென்றும்,

* Plato. † Aristotle. ‡ Descartes.

அப்படி ஏதேனுஞ் சம்பந்த மிருப்பினும் அது கனலிற்கும் பனிக்கட்டிக்கு முள்ள சம்பந்தத்தை யொக்குமென்றும் அறைவர். இவர் பொதுப்பட இங்ஙனம் கூறி யிருப்பினும், மனிதனை நோக்குமிடத்து மனத்திற்கும் யாக்கைக்குமொரு வித சம்பந்த முளதெனவும், அச்சம்பந்தமிவ்விரு பொருளின் றன்மையா லுண்டாகாது, கடவுளின் விருப்பத்தின் காரணத் தாலுண்டாமெனவுங் கூறுவர். நாம் செய்யு மொவ்வொரு காரியமும் கடவுள் விருப்ப மிருப்புழி நிகழ்வதாக் கொள்ளி னும், இக்கொள்கை மாறுகொளக் கூறலென்னும் வழுவினை யுடைத்தாம். ஏனெனில் இக்கொள்கையர் முன்னை மனத் திற்குஞ் சடப்பொருளிற்கும் யாதொரு சம்பந்தமு மிலதென மறுத்துப் பின்னைச் சகல அண்டங்களிலும் புகழ்பெற்ற சித் துப் பொருளாகிய கடவுட்குஞ் சடப்பொருளுக்குஞ் சம்பந்த முளதெனக் கூறுகின்றனர். ஆதலின் இவர் முன்னர் மறுத்த விடயத்தையே பின்னர் நாட்டுகின்றவ ராவர். இக்காரணத் தால் இக்கொள்கையும் நிலை நிறுத்தப்படாது தாழ்தல் காண்க.

மேற் கூறியதினின்றும் மாறுய விக்கொள்கையாதெனில், மனத்தின்கண் நிகழ்வன மூளையின் காரணத்தாலென்பதூஉம் இம்மூளையின் மூலமாய் மனமானது யாக்கையின் றொழிற்குக் காரணமாமென்பதூஉமாம். சிலர் உடலுளமாகிய இவை இரண்டுஞ் சடப்பொருளாயும் அல்லது இரண்டுஞ் சித்துப்பொ ருளாயுமிராது, ஒன்று சடப்பொருளாயும் மற்றொன்று சித்துப் பொருளாயு மிருத்தலால், இக்கொள்கை காரண காரியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் நியாயத்திற்கு மாறுயிருப்ப தெனக்கொண்டு, இதை மறுக்கின்றனர். ஆனால் இவ்விரண்டு மொரு தன்மையனவாய பொருளா யிராவிடினும், ஒரு தன்மையனவாய நியாயங்களை மேற்கொண்டு நடத்தலால் இக்கொள்கைக்கு மாறுயிருப்பதாகக் கூறப்பட்ட நியாயத்தை யும் இஃது ஒருவாறுபூர்த்தி செய்தல் காண்க. விருப்பமானது தேகத்தளர்ச்சியை மேலிட்டு நாம் செய்யக் கருதுந் தொழிலைச் செய்விக்குந் திறனைத் தருதல், நோயின் காரணத்தால் மனத்தை

யொருதொழிலினிடத்தே யூன்றி அத்தொழிலைச் செய்ய முடியாமை ஆகிய இவைகளான் உடலிற்கும் உளத்திற்கும் மிகவும் நெருங்கிய வொற்றுமையுளதென யாவரு மெளிதிலுணருமாற்றலுளர். ஆதலின் இக்கொள்கை சிறப்புடைத்தென யாவராலுங் கோடற்பாலது.

—ஞானபோதினி.

குழந்தைகளின் நல்வளர்ப்பு

[திரு. பு. க முத்துசாமியா பிள்ளையவர்கள்]

நம் செல்வி ஆரும் சிலம்பு 5ம் பரலில், நம் நாட்டு மக்கள் நன் மக்களாக இருக்க வேண்டும் என்று விழையும் நாம், உடற்பயிற்சி விளைந்த எலும்பையும் சாய்ந்த நடையையும் அறிவின்மையையும் நன்ருக்குமென எண்ணக்கூடா தென்பதும் அவைகள் சிறூர்களின் குழவிப்பருவ உடற்கூற்றே என்பதும் அவற்றைச் செம்மையாக்கத் தாய்மார்களின் உடல் நலம் பேணலும் அவர்கள் உரிமையைக்காத்தலும் வேண்டப்படுவன என்பதும் குழந்தைகள் தாய்ப்பால் சுவைத்தல் ஒரு ஆண்டு வரைதான் ஏற்றது என்பதும் மேலும் பால் ஊட்டல் இன்னல் விளைவிக்கும் என்பதும் குழந்தை பிறந்த முதல் ஆண்டு முடிவிற்குள் இங்கிலாந்தில் 7ல் 1 பகுதியும் அதினும் மும் மடங்கு இந்தியாவிலும் இறந்து விடுகின்றன என்பதும் இவ்வாறு அழிவதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருத்தல் தகாதென்பதும் ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளைக் காட்டிலும் மிகுதியாய் இறக்கின்றன என்பதும் அவ்வாறு இறத்தற்குக் காரணம் நோய்தாங்கும்வன்மை பெண் குழந்தைகளைப் போல் ஆண் குழந்தைகளுக்கு இல்லை என்பதும் தெரிவித்தோம்.

இவ்வாறு எண்ணிறந்த குழந்தைகள் இறப்பதின் காரணம் அவர்கட்குக்கிடைத்த குறைவான உணவு என்பது அல்ல. பின் என் எனின் அவர்கட்குக் கிடைத்துள்ள தீய உணவே ஆகும், குழந்தைகட்குக் கொடுக்கப்படும் உணவுகளில் முதன்மை

பெற்றது மூலைப்பாலேயாகும். இது குழந்தைகளின் உணவுகளில் ஒப்பு உயர்வு அற்றது. போஸ்டன் நகரத்து ராட்ச் என்பவர் ஆவின் பாலின் சாற்றைப் பிரித்துப்பிரித்து குழந்தைகட்கு ஏற்ற அளவு அவைகளைச் சேர்த்து ஒரு வகைய தகுதியான உணவாகச் செய்துள்ளார். ஆனால் அவ்வாறு செய்வதில் ஏற்படும் தொல்லையையும் செலவையும் நோக்கும் பொழுது நமது மனம் அவ்வகைப்பட்ட உணவில் செல்லுகிறதில்லை. ஆகவே முலைப்பாலுக்குச் சரியான குழந்தையின் உணவு இதுவரை கண்டு பிடிக்கப்படவும் இல்லை. இனிக் கண்டு பிடிக்கவும் இயலாதெனவே தோற்றுகின்றது.

தாய்ப்பாலினால் குழந்தைகட்குண்டாம் நன்மைகள் மிகப் பல. இப்பாலின் தன்மையை நன்கு அறிவோமானால் அவை நமக்குப் புலப்படும். பால் ஊட்டுபவள் உடல் நலம் உள்ளவளாயிருப்பின் அவளிடம் உள்ள பால் எப்பொழுதும் குழந்தைக்கு நலம் பயக்கத்தக்க வெது வெதுப்புடன் இருக்கும். எவ்வித இன்னல் இழைக்கும் புழுக்களினின்றும் அது விடுபட்டது. என்றாலும் கொதிக்க வைப்பதினாலாவது அல்லது நச்சுப்புழுக்களைக் கொல்லுவதற்காகச் சேர்க்கும் மருந்தினாலாவது எவ்வித மாறுதலாவது கெடுதலாவது அப்பால் அடையாதது. குழந்தைகளின் நல்வளர்ச்சிக்கு எவ்வெவை வேண்டுமோ அவைகளை மட்டிலும் தன்னுள் அஃது அடக்கியுள்ளது.

குழந்தைக்கு வேண்டாத எத்தகைய சிறு பொருளும் அப்பாலில் இல்லை எனலாம். அந்தப் பாலில் உள்ள சிறிது மிகுந்த இனிப்பு அதனை எவ்விதத்திலும் புளிக்கவிடாமல் தடுப்பதோடு அதற்குப் பதிலாக வேறு எதனையும் நாம் சேர்த்துவிடமுடியாத நிலையிலும் இருக்கின்றது. இவைகளுக்கெல்லாம் மேலாகத் தாய்ப்பாலில் மாத்திரமே குழந்தையைப் பல நோய்களினின்றும் காக்கக் கூடியதாயின் செந்நீரில் (இரத்தம்) இருந்து தோன்றும் சில பொருள்கள் காணப்படுகின்றன. குழந்தைகளை அவர்கள் பால் சுவைக்கும் காலம் அளவும் புழுக்கள் வழியாக வரக்கூடிய சில நோய்கள் அணுகுகிறதில்லை,

ஏதாவதொரு புழுவாயிலாக வந்த நோயால் ஒரு தாய் பற்றப் பட்டிருந்தால் அவளுடைய உடலில் உண்டாயிருக்கும் காக்கும் வன்மையானது அந்நோயைக் குழந்தைக்கு வரவொட்டாமல் தடுக்கிறது.

சில குருட்டு வழி காட்டிகளை நம்பிப் புதுநாகரீகம் எனக் கருதிக் குழந்தைகள் தாய்மார்களிடமிருந்து பெற வேண்டிய வளர்ப்பை வேறு விதம் செய்து விடலாம் என நினைத்து நாம் மோசம் போகாமலும் அதன் வாயிலா[illegible]து குழந்தைகளின் நல் வளர்ச்சியைத் தடுப்பதை ஒழித்து நமது குழந்தைகளை நோய்வாய்ப்படாமல் காப்பாற்றக் கூடிய தாய்ப்பால்களை நாம் போற்றியும் நமது குழந்தைகளைக் காலன் வாயினின்றும் காப்போமாக. இஃதே இறைவன் நோக்கமாம்.

கடந்த 20 ஆண்டுகளாக நம்மால் இயன்றவாறெல்லாம் தாய்ப்பாலின்றிக் குழந்தையை வளர்க்க முயன்று அதற்காவன பலவும் செய்தோம். அதன் பயனாக இப்போது தாய்ப்பாலின்றிக் குழந்தைகள் நன்றாய் வளராது என்னும் நிலையையும் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிந்து கொண்டோம். இனி இவ் வுண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மேல் நாட்டில் ஆல்டர்மேன் பென்சமின் பிராட் பென்ட் (Alderman Benjamin Broad Bent) என்னும் பெரியார் தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய உண்மையான கடமையாகிய பாலூட்டலைச் செய்விப்பதற்காக வேண்டிய உதவியையும் உபசரிப்பையும் செய்து வந்தாராம். உண்மையில் இவரே நாட்டுப் பற்றுடையவராவர். தாயால் குழந்தைக்குப் பால் ஊட்ட இயலாவிடின் வேறு பாலூட்டும் திறனுடைய ஒருத்தியை வைத்தும் அவ் வேலையைச் செய்து கொள்ளுதல் நலம்.

கொடுக்கூர் கோவிந்தன்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A.]

(௩௩௮-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவுங் கவலை யடைந்தவனாய்க் காவற்காரனை நோக்கி "நான் யாரென்று அறிவையோ?" என்று கேட்டான்.

"சம்புலிங்க நாடார் நீர்தா னென்று அறிவேன். ஏன்? எதற்காகக் கேட்கின்றீர்?" என்று வினவினான் காவற்காரன். தன் மேற் சட்டையிலிருந்த பைகளினுள் தேடிப் பார்த்தான் சம்புலிங்கம். ஒன்றையுங் காணவில்லை. கையிற் பணமிருந்து கொடுத்தால் அக்காலத்தில் சிறையிலிருந்தபடியே புலிப்பால் வேண்டுமானாலும் பெறலாம் என்பதை அவன் அறிவான். பைகளிலோ ஒரு செல்லாக் காசைக் கூடக் காணவில்லை. ஒரு கால் பின்னர்க் கொடுக்கிறேன் என்று உறுதி கூறினால் காவற் காரன் உதவி செய்ய முன் வரமாட்டானா என்று கருதினவனாய்

"எனக்கு நண்பர்கட்குக் குறைவில்லை யென்பதை நீ யறி வாயன்றோ?" என்று கேட்டான்.

"உமது நண்பர்கள் இச் சிறைக் கூடத்துள் துணிந்து தலையிடக் கருதமாட்டார்கள்; நுழைந்த தலை வெளிவராது என்பது அவர்களுக்குத் தெரியும்" என்று பதிலிறுத்தான் காவற்காரன்.

சற்றுக் கடுகடுத்த முகத்துடனேயே இவ்வாறு காவற் காரன் கூறினாயினும் தன்னாலியன்றதைப் பொருள் வருவாய் கருதிச் செய்ய மறுக்காதவன் போலவே காணப்பட்டான். ஆகவே,

"அவர்கள் ஏன் உள்ளே வரப்போகிறார்கள்? வரமாட் டார்கள். ஆனால் வேண்டுமென்று நினைத்தால் எவ்வித கெடுதி யும் நேரிடாமல் உள்ளே வந்து செல்லக் கூடிய நண்பர்கள் அகப்பட மாட்டார்களா?" என்றான்.

“அது உண்மையே. அன்றியும் இங்கே அளிக்கப்படும் உணவை மட்டும் நம்பி உம்மை விட்டு விட்டால் விரைவில் உருத் தெரியாமல் இளைத்து விடுவீர் என்பதை அறியார்களா?” என்று கூறினான் காவற்காரன்.

ஆம், அக்காலத்தில் சிறைக் கூடத்தில் அளிக்கப்பட்ட உணவை மட்டும் நம்பி விடப்பட்ட கைதிகளிற் பெரும்பா லோர் பட்டினி கிடந்தே இறந்திருப்பதாகக் கேட்டிருந்தான் சம்புலிங்கம். எனவே

“இருந்தாலும், என் கையில் இப்பொழுது பணமில்லை. என்னிட மிருந்தவற்றை யெல்லாம் எடுத்துச் சேமித்து வைத்து விட்டார்கள் போலீஸ்காரர்கள் என்பதை நீ அறி வாய். நான் உனக்குப் பத்து ரூபாய்கள் பின்னர்க் கொடுக்கி றேன் என்று உறுதி கூறினால் நான் கேட்பதைக் கொண்டு வந்து கொடுக்க ஒப்புக் கொள்வாயோ?” என வினவினான்.

“பத்து ரூபாய்தானா? பத்து ரூபாய்க்கு இங்கு என்ன கிடைக்கும்?”

“ஒரு குவளை நல்ல எலுமிச்சம் பழப் பானகமும், ஒரு உருண்டைத் தயிருஞ் சோறும் கிடைத்தாற் போதுமானது. அதற்கு மேல் ஒன்றும் அதிகமாகத் தேவையில்லை” என்றான் சம்புலிங்கம். அதைக் கேட்ட காவற்காரனுக்கு இது நல்ல ஊதி யம் என்றே தோற்றிற்று. குறைந்தது ரூ. 9–8–0 யாவது மிகுதியாம் என்று கண்டு கொண்டான். வெறும் வாய்ப்பேச் சுத் தானே என்று கருதுவதற்குக்கூட உறுதி கூறுபவன் சம்புலிங்கமாதலால் அவன் சொன்ன சொல் தவறான் என்ற நம்பிக்கை யிருந்தது. அன்றியும் இதைப்போன்று இன்னும் பல பத்து ரூபாய்கள் பெறுவதற்கு இது ஒரு முதற்படியாக இருக்கலாம் என்ற எண்ணமும் எழுந்தது. ஆகவே சரியென்று ஒப்புக்கொண்டு கையிலிருந்த களியையும் நீரையும் அங்கேயே வைத்துவிட்டு “உங்கள் வாக்குறுதி யொன்றே போதும். இதோ ஒரு நொடியில் வருகிறேன்” என்று கூறி விரைந்து சென்றான்.

சென்றவன் அரைமணி நேரத்தில் ஒரு தகரக்குவளை நிறை யப் பானகமும் இரண்டு தயிர்ச்சோறு உருண்டைகளும் ஒரு சிறு அகல் விளக்கும் நெருப்புப் பெட்டியுங் கொண்டு வந்தான்.

அதைக் கண்ட சம்புலிங்கம் அவனது நற்கருத்தை மெச் சினவனாய் "அப்பா, உன்னை இளகிய நெஞ்சுடையவன் என்று தான் கூறவேண்டும். இல்லாவிட்டால் இக்கிழவர் இருக்கும் திக்கற்ற நிலையைக் கண்டு ஒரு காவற்காரன் இவ்வளவுக்கு இரக்கங் கொள்வான் என்று எதிர்பார்ப்பது வீணாகும்." என்று கூறினான்.

காவ:—"என்ன, இந்தக் கிழவருக்காகவா இத்துணை வீண் முயற்சி? அவர் இன்னும் ஒரு நாட் பொழுது உயிருட னிருப்பார் என்று கூறுவதற் கில்லையே?"

சம்பு:—"உஸ், உரக்கக் கூறாதே. சரி, இனி நீ போக லாம். உன் பணத்தைப்பற்றி எள்ளளவும் கவலை கொள்ள வேண்டாம்."

என்று கூறவே காவற்காரன் கதவைப் பூட்டிக்கொண்டு சென்று விட்டான். சம்புலிங்கம் கிழவருக்கு இரண்டு மூன்று வாய்ச்சோறூட்டிப் பானகத்தில் சிறிது கொடுத்ததும் "ஆ இப்பொழுது சற்றுக் களை தெளிந்தாற்போலிருக்கிறது. நான் தூங்கட்டுமா சிறிது நேரம்?" என்று கிழவர் கேட்டார்.

"சரி தூங்கும்" என்று சம்புலிங்கம் கூறியதும், கிழவர் கண்ணயர்ந்தார். சம்புலிங்கம் பிடித்த அளவுக்குச் சிறிது உண்டு, தண்ணீர் அருந்திய பின் கீழே விரித்திருந்த கோரைப் பாயிற் படுத்தான். நெடுநேரம் உறக்கம் வரவில்லை. கிழவர் சற்றுத் திணறித் திணறி மூச்சு விட்டது நன்றாக இவன் காது களில் விழுந்தது. வெளியிலோ மற்றக் கைதிகள் சண்டையிட் டுக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தனர். ஆடுமாடுகளைப் பட்டி யில் அடைப்பது போல் அவர்களை யெல்லாம் ஒரே பெரிய காவலமைந்த கூடத்தில் அடைத்து வைத்திருந்தார்கள் என் பது சம்புலிங்கத்திற்குத் தெரியும். அன்றியும் அவர்கள் கூக்

குரலிட்டுச் சண்டையிடுவது கேழ்வரகுக் களிக்கும் தண்ணீருக் குந்தானென்றும், அச்சண்டையில் சில வேளைகளில் கொலை நடந்து விடுவதும் உண்டு என்பதும் அவனுக்குத் தெரியும். ஆகவே தன்னை இவ்வறையில் அடைத்து வைத்தது தன்னு டைய நற்காலந்தானெனக் கருதினான். போலீஸ் புலி கோவிந்தசாமி நாயுடுகாரு, சம்புலிங்கம் திறமை வாய்ந்தவனாதலால் தப்பித்துக்கொள்ள முடியாதபடி அவனைத் தனியான சிறு அறையில் அடைக்கவேண்டுமெனக் கட்டளையிட்டிருந்ததால் தன்னை இவ்வறையில் அடைத்து வைத்திருக்க வேண்டுமெனக் கண்டு கொண்டான். தப்பிச் செல்வதைப்பற்றி இன்னும் அவன் ஆழ்ந்து நினைக்கவில்லை. இருந்தாலும் ஒரு வழி அகப் படாமற் போகாதெனத் திண்ணமாய் நம்பியிருந்தானாதலால் அதைப்பற்றிக் கவலையே கொள்ளாம லிருந்தான்.

வெளியிற் கூக்குர லடங்கிற்று: காவற்காரன் விளக்கை யணைத்துவிட் டிருக்கவேண்டும்போலும். இருட்டில் சிறு சண் டைகள் ஒய்ந்துவிடுதல் இயல்புதானே? சம்புலிங்கம் கிழவரைப் பற்றி நினைக்கத் தொடங்கினான். ஒன்றன்பின் னொன்றாய்ப் பல கேள்விகள் எழுந்தன. இவர் பீதாம்பர யோகியானால் அங்கே வந்தவன் யார் என்றதே பெரிய ஐயமாக விருந்தது. தான் கூடாரத்தை விட்டு வெளிவந்தவுடன் காசி அதன் கயிறு களை யறுத்து அதைக் கீழே தள்ளியபின் என்ன நடந்தது என நினைவு கூர்ந்து பார்த்தான்.

“ஆம், காசி நீ போ என்று சொல்லிவிட்டுப் பின்னால் நகர்ந்து கொண்டே, விழுந்த கூடாரத்தை நோக்கிய வண்ணம் பீதாம்பர யோகியாரின் கொட்டகைப் புறம் சென்றேன்; அக்கொட்டகையின் மீது சாய்ந்து கொண்டு நின்றேன். பிறகு ஒன்றும் தெரியவில்லையே” என்று கூறிக் கொண்டான். ஆயி னும் தன் தலையின் பின்புறத்தில் சிறு வலியிருந்ததும் அப் பகுதி சிறிது வீங்கி யிருந்ததும் எதனால் என்று ஆலோசித்துப் பார்த்தான்.

எப்படி யிருந்தாலும் இந்த அடி யோகியாரின் கொட்ட கையி னுள்ளிருந்துதான் பட்டிருக்கவேண்டும் என்பது உறுதி

யாகத் தோன்றிற்று. அப்படியானல் அடித்தவன் யார்? மறுபடியும் அங்கிருந்த யோகியார் யார்? என்ற கேள்வியிலேயே வந்து முடிந்தது அவன் ஆலோசனை.

"சரி, இக்கேள்விக்கு விடை இப்பெரியவர் எழுந்தால் தான் தெரியும்; அவரை எழுப்பிக் கேட்பது என்பது நல்லதல்ல; ஒருகால் எழுந்திராமலே இறந்து விட்டாரானலோ? அதனல் ஒன்றுங் கெட்டு விடாது" என்று முடிவு கட்டினன்.

"கீச் கீச், கீச் கீச்"

"என்ன அது? கரிச்சான் என்ற கரிக்குருவி யன்றோ கூவுகின்றது? பொழுது புலர இன்னும் இரண்டு மூன்று நாழிகைதான் இருக்கவேண்டும் போலும்" என நினைத்தான்.

கிழவர் மெல்லிய குரலில் ஏதோ திணறிக் கொண்டே கூறினர்.

சம்புலிங்கம் எழுந்து அவரருகில் விரைந்து சென்றன்.

ஆறாங் கூறு

சம்புலிங்கத்தின் உறுதி மொழி

"இனி நான் நெடுநேரம் பிழைத்திருக்க மாட்டேன்" என்று மேன்மூச்சு வாங்கக் கூறினர் யோகியார்.

தான் முன்னெச்சரிக்கையுடன் மிகுத்து வைத்திருந்த பானகத்தை யெடுத்துச் சம்புலிங்கம் கிழவருக்கு ஒரு சிறிது அளித்தான். அதை யுட்கொண்டதும் ஒருவாறு சற்றுத் தெளிந்தவராய்ச் சம்புலிங்கத்தின் கைகளைப் பிடித்த வண்ணம் யோகியார் எழுந்து உட்கார்ந்தார்.

எழுந்து உட்கார்ந்தவர் "படுத்தபடி என்னற் பேச முடியவில்லை. இப்படி உட்கார்ந்து கொண்டால் தான் பேசலாம் போலிருக்கிறது. உன்னிடங் கூறவேண்டிய பல செய்திகளிருக்கின்றன. அவ்வளவையுங் கூறி முடிக்கும் வரையில் உயிர்

நிற்குமோ நிற்காதோ தெரியவில்லை. அது, எப்படியானாலும் உன்னை நான் நம்பலாமல்லவா? வழிப்பறிக்காரனாயினும் நீ சொன்ன சொல் தவறாதவன் என்று பெயர் எடுத்த சம்புலிங்க மல்லவா?" என்று வினவினார்.

சம்பு:—"என் தொழிலை நடத்தி வரும் மற்றையோரை நோக்க நான் உண்மையாக நடந்து கொள்வேன் என்று பெருமை கூறப் பின்னடைய மாட்டேன். கூட்டாளியாகட்டும் எதிராளியாகட்டும், யாரையும் சொன்ன சொல் மாறி இது வரை வஞ்சித்ததில்லை."

யோகி:—"சரி, அது போதும். என்றால் இனிச் செய்ய வியலாததும், உன்னை யொத்தவர்களாலேயே முடியக்கூடியது மான ஒரு செய்தியுள்ளது. நீ எப்படியும் இச் சிறையினின் றும் விரைவில் தப்பிச் செல்வாய் என்பதை நான் உணர்கி றேன். எதிர்கால நிகழ்ச்சிகளைக் குறித்து முன்பெல்லாம் நான் பெரும்பாலும் பகடியடித்துக் குறி சொல்லி வந்தது உண்மையேயாயினும் இப்பொழுது நான் கூறுவது அதனைச் சேர்ந்ததல்ல. என் அகக்கண் முன் உண்மையாகத் தோன்று மொன்றையே கூறுகிறேன். நீ திண்ணமாய் இதை விட்டு விரைவில் வெளியேறப் போகிறாய்."

சம்பு:—"ஆம், நீர் கூறுவது உண்மையே. என் தோழர் கள் ஒரு நொடிகூடக் கண் அயரமாட்டார்கள். அவர்களே அயர்ந்து விடுவதாக வைத்துக் கொண்டாலும் நான் இங்கேயே இருந்துவிடப்போவதில்லை என்பது உறுதி."

யோகி:—"நீ தான் தப்பிச் செல்வாய் என்று கூறு கிறேனே; அதைப்பற்றிய ஐயமே வேண்டாம். சரி, நான் கூறப் புகுவதைக் குறியாகக் கேள். என் ஒரு உயிருக்காக நான் இத் துணை காலம் இவ்வல்லற் பிழைப்புப் பிழைத்துப் பொருளீட்ட வில்லை. எனக்கு ஒரு பிள்ளையிருந்தான்: அவன் இறந்து போனான். இறக்கு முன் ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாகிய இரண்டு குழந்தைகளைப்பெற்று வைத்துவிட்டே இறந்தான். பையனுக்கு வயது பதினேழு ஆகிறது. பெண்ணுக்கோ வயது

பதினன்கு. பையன் காலில்லாத பிறவி முடவன். என் மகன் இறந்த இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளாய் இவ்விரு குழந்தைகளையும் வளர்க்க அவர்களின் தாயாருக்கு நானே பொருளுதவி செய்து வந்தேன். ஆயினும் அவள் பெருஞ் செலவாளியாதலால் நான் அனுப்பிய பொருளனைத்தையும் செலவழித்துவிட் டிருப்பாளே யன்றியொரு செம்புக்காசுகூட மிகுதியாக வைத்திருக்கமாட்டாள் என்பதை நன்கறிவேன். ஆகவே இவ்விரு குழந்தைகளின் பிற்கால வாழ்வைக் கருதி ஒரு பெருந்தொகையான பொருளைக் கோமளேச்சுரன் பேட்டையிலுள்ள என் வீட்டிலோர் புறத்தில் ஒளித்து வைத்திருக்கிறேன். விரைவில் நான் இறக்க விருப்பதால் ஒளித்து வைத்த பொருள் எங்கே அக் குழந்தைகட்குப் பயன்படாமற் போய் விடுகின்றதோ என்றுதான் கவலைப்படுகிறேன். என் மருமகளாகிய குழந்தைகளின் தாயாரும் சில நாட்களுக்கு முன் இறந்து விட்டாளாதலால் குழந்தைகள் அணைப்பாரின்றி அலைவுறுவார்கள். பையன் நொண்டியாயிற்றே, எவ்வாறு பிழைப்பிற்கு வழி தேடப் போகிறுன்?''

சம்பு :—“ குழந்தைகள் இப்பொழுது எங்கே இருக்கின்றனர்?''

யோகி :—“ திருக்கழுக் குன்றம் சங்குகுளத்தின் தென் கரையிலுள்ள ஒரு தனியான சிறு வீட்டில். அவ் வீட்டார் என் மருமகளின் நெருங்கிய உறவினர். ஆதலால் அவர்களிடம் குழந்தைகளை விட்டுவைத் திருந்தேன். ஆயினும் வயிற்றுக் கில்லாமையாற் குழந்தைகளை மிகவுங் கொடுமையாக நடத்தக் கூடியவர்களாயிற்றே அவர்கள் என்று நினைக்கும் போதெல்லாம் என் வயிறு பகீரென்கிறது. என்னிட மிருந்து ஒன்றும் பெறுவதற்கு இனி வழியில்லை யென்பதைக் கண்டு கொண்டார்களானுல் அன்றே குழந்தைகளை யடித்துத் தெருவிலோட்டி விடுவார்கள். நான் சேர்த்து ஒளித்து வைத்திருக்கும் பொருளில் ஒரு பகுதி கிடைத்தாற்கூட அவர்களிருவருக்கும் அது ஆயுட் காலம் முழுதும் போதும். சம்புலிங்கம், நான் சொல்வதைக் கேள். நீ இவ்விடமிருந்து தப்பியவுடன்

நேரே என் வீட்டிற்குச் சென்று அப்பொருளை யெடுத்து அதிற் பாதியை நீ யெடுத்துக் கொண்டு மற்றொரு பாதியை யவர்களிடஞ் சேர்த்து விடு.''

சம்பு :—"சீ, வெட்கக் கேடல்லவா அது? ஒரு பைசா கூட அதிலிருந்து நான் தொட மாட்டேன். வழிச் செல்வோரை யடித்துப் பிடுங்குவது என் தொழிலே யாயினும் ஒரு நொண்டிப் பையனையும் ஒன்று மறியாவொரு சிறு பெண்ணையுஞ் சேரவேண்டிய பொருளிற் கையை வைப்பது என்பது என் தொழில் முறைக்கே இழிவானதாகும். யோகியாரே இதை உண்மையாய் நம்பும்; நான் மட்டும் இச் சிறையினின்றுந் தப்பி நீர் புதைத்து வைத்திருக்கும் பொருளை எடுத்தால் அப் பொருள் அவ்வளவையும் குழந்தைகளிடம் உடனே சேர்த்து விட்டு மறுவேலை பார்க்கிறேன். இது உறுதி, முக்காலும் உறுதி. என் தோழர்களும் இதற்கு ஒப்புக் கொள்வார்களே யன்றி மறுத்துக் கூற மாட்டார்கள். இருக்கட்டும், குழந்தைகள் பெயர் என்ன ?''

யோகி :—நடராஜன், அலர்மேல்மங்கை — திருக்கழுக் குன்றம் சங்குகுளம்—தென் கரை — தனிவீடு—நான் பொருளைப் — புதைத்து— வைத்—திருக்—கிற—வி—ட—மோ—''

என்று கூறும் பொழுதே கண்கள் சுழன்று தலை நடுக்குற்றுப் பின்னுற் சாய்ந்தார். எச்சரிக்கையுடன் சம்புலிங்கம் அவரை அணைத்துத் தாங்கி இன்னும் சிறிது பானக நீரை யளித்தான்.

"அப்பாடா — உஸ் — ஐயோ — இடத்தை ஒரு சிறு கடிதத்திற் குறித்து என் தலையணைக்குக் கீழ் வைத்திருக்கிறேன் — நானிறந்த பின் அதை யெடுத்து நன்றாகப் பார்த்து உளத்திற் பதித்துக் கொண்ட பின்—கிழித் தெறிந்து விடு— ஆம்—கிழித் தெறிந்து விடு தெரியுமா? வேறு யார் கையிலாவது அகப்பட்டுவிட்டால் குழந்தைகளின் பழி உன் தலையில் தான்—''

என்று கூறியதும் பெரியதோர் சுமையை இறக்கி வைத்தவர் போற் பெருமூச் செறிந்தார். முற்றிலுந் தன்னை நம்பி

விட்டார் என்பதைச் சம்புலிங்கம் உணர்ந்தான். தானளித்த வாக்குறுதியை எப்படியும் விரைவில் நிறை வேற்றுவிக்க வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டான்.

பெரியவரிடம் சில கேள்விகளைக் கேட்டுத் தனக்குள்ள சில ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று இரவெல்லாம் எண்ணியிருந்தான். ஆயினும் இப்பொழுது பெரியவர் இருக்கும் நிலைமையில் அவரைக் கேள்விகள் கேட்டு வருத்த அவனுக்கு விருப்பமில்லை.

நந்தவனச் சந்தையிற் கொட்டகை போட்டுக்கொண்டு குறிசொல்லி வந்த பீதாம்பரயோகி என்பவன் உண்மையில் யார்? கோமளேச்சுவரன் பேட்டையிலுள்ள யோகியாரின் சொந்த வீட்டிலேயே அவனுமிருந்து வருவதால் யோகியார் ஒளித்து வைத்திருப்பதாகச் சொன்ன பொருட் குவியலை அவன் இதுவரை யெடுத்திருக்கமாட்டானா? அப்படி யெடுத்திருப்பானானல் அது குறித்து வீண் முயற்சி செய்வதேன்? என்ற இக்கேள்விகள் அவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆகவே அவாவை அடக்கமுடியாமல் "நீர் இங்கு எப்படி வந்தீர் என்பது நினைவிருக்கிறதா? பேசுவது வருத்தமாயிருக்குமாயின் கூற வேண்டாம். நான் ஏதோ ஒரு உட்கருத்தைக் கொண்டுதான் இதைக் கேட்கிறேன்," என்றான்.

யோகியார்:—"நினைவிருக்கும் வரையிற் கூறுகிறேன். ஒன்றுந் தெளிவாகத் தெரியவில்லை. நான் சிறிது நேரம் உணர்விழந்து கிடந்திருக்க வேண்டும். மீண்டும் நல்லுணர்வு பெற்றபோது நடுத்தெருவில் நான் விழுந்து கிடக்கக் கண்டேன். நான் விழுந்துகிடந்ததும் என் வீட்டிற்கருகாமையிலேதானிருக்க வேண்டும். என் அருகில் ஒரு சாக்குப்பையிற் சில வெள்ளித் தட்டுகளும் குவளைகளும், பித்தளைக் கலங்களுடன் இருந்தன. என்னைச் சுற்றிப் பல போலீஸ்வீரர்கள் நின்றுகொண்டு நான் அவைகளைத் திருடிவந்ததாகக் கூறிக்கொண்டிருந்தனர்."

(தொடரும்.)

பெருந் திணை

பெருந் திணை

[இளவழகனுர்]

ஆசிரியர் தோல்காப்பியனுர் பெருந்திணை வகைமையை விளக்கு மிடத்து,

> "ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
> தேறா தலொழிந்த காமத்து மிகுதிற
> மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே."*

என்றொரு நூற்பாக் கூறுவர்: இதன்கண் தலைவன் தான் விரும்பிய தலைமகளைப் பெறமாட்டாவிடத்து மடலேறுதலும், தலைவன்றலைவிய ரிருவருந் தமது இளமை நீங்கிய பின்னுங் காம நுகர்தலும், தெளிதலியலாதபடி மிக்கு நிற்குங் காம உணர்ச்சி யுடையராய் அவ்வுணர்ச்சிக் கேற்ற செயனிகழ்த்தலும், அவ் வகை மிகுந்த காமத்தால் எதிர்ப்பட்டாரை வலிதிலகப்படுத் தலுமெனச் சொல்லப்பட்ட நான்கு வகை யொழுக்கங்களும் பெருந்திணையாமென்பது கூறப்படுகின்றது; இந்நூற்பாவுக்கு இளம்பூரணர் உரைத்த உரையினும், நச்சினர்க்கினியருரைத்த உரைக்கருத்தே பொருத்தமாயிருக்கின்றது; 'பெருந்திணை' யென்பது அளவுக்கு மேற்பட்ட ஒழுக்கமாகும்; அதாவது ஓரளவான காமத்தால் நிகழுஞ் செயல்களல்லாமல், அளவு மீறிய காமத்தால் நிகழுஞ் செயல்களை யுடையதாகும். இவற் றையே தொல்காப்பியர் மேற்காட்டியவாறு நான்கு வகைப் படுத்து ஓதுவாராயினர். அவற்றுள் 'ஏறிய மடற்றிற' மென் பது, தலைவனொருவன் தான் காதலித்த மணமகள் அவள்தன் சுற்றத்தாரது அறியாமையால் தனக்குக் கிட்டாளானவிடத்து, மடல் ஏறித் தனது உறுதியைப் பிறர்க்குப் புலனும்படி செய்து அவ்வாற்றால் அவளைப் பெறுதலாம்: இதனியல்பினை 'மடற் றிறம்' என்னும் எமது •அகப்பொருட் கட்டுரையில் நன்கு

---

*தொல், அகத், டுக.

விளக்கியிருக்கின்றேம்; 'மடல் ஏறுவேன்' என்று தலைவன் சொல்லளவாகக் கூறுதல் கைக்கிளையாமெனவும், செயலளவாக மடல் ஏறுதலென்பது பெருந்திணையாமெனவும் ஆசிரியன் மார் கருதுகின்றனர். 'மடல் ஏறுதலை' அங்ஙனம் பெருந்திணை யொழுக்கமெனக் கருதுதற்குரிய ஏது, அது மிக்க காமத்தால் நிகழுகின்றமையே யாகு மென்ப. இனி 'இளமைதீர் திறம்' எனப்பட்டதும் அதுவாம்; இது தலைவன் தன் தலைவியின் இளமைப்பருவத்துக்கு ஏற்றவனுகாமல், அவ்விளமை கடந்து மிக மூத்தோனுயிருத்தலெனவும், தலைவி தன் தலைவனுக்கு முறைப்படி நான்காண்டுகள் இளையளாகாமல் அவ்விளமை நீங்கி அவனேடு ஒத்தபருவத்தளாயிருத்தலும் அன்றி அவனி னும் மூத்தபருவத்தளாயிருத்தலுமெனவும், தலைவன் றலைவிய ரிருவருமே காம நுகர்தற்குரிய இளமைப்பருவங் கடந்து மூப்புடையராயும் இளமையுடையார் போலக் காமநுகர்ச்சி யுடையராயிருத்தலெனவும் மூன்று வகையாகக் கூறப்படு கின்றது; இன்னோரன்னவும் மீறிய காமத்தால் நிகழ்வனவெனப் பட்டுப் பெருந்திணையுட் படுமென்ப. இனித் 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்' என்பது தெளிதலியலாதபடி ஒரு வற்கு மிகுந்துவிட்ட காமமிகுதிப்பாட்டால் அவன்பால் நிகழும் நாணமுதலியன அற்ற இழிசெயல்களாம். எனவே இதுவும் பெருந்திணையெனவே கொள்ளப்பட்டது. இனி 'மிக்க காமத்து மிடல்' என்பதும் ஒன்று. அதாவது அங்ஙனமொரு வற்கு மிகுந்துவிட்ட அக் காம மிகுதிப்பாட்டால், அவன் அக் காம உணர்ச்சி எழாதாரையும், விரும்பாதாரையும், அவ் வுணர்ச்சியைத் தன் மாட்டுத் துய்க்க இசையாதாரையும் வற் புறுத்தி மெய்யுறச் செய்தலாம்; ஆகையால் இதனையும் ஆசிரி யன்மார் பெருந்திணை யென்றனர். இவ்வாறு காட்டப்பட்ட இந் நால்வகைப் பெருந்திணைகளுள்ளும் 'ஏறிய மடற்றிற'மென் பது ஆண்பாலார்க்கே உரித்தென்பதும், ஏனைய ஆண்பெண் பாலிருபாலார்க்குமே உரியவென்பதும் அறியற்பாலன.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் தாம் விளக்குதற்கு எடுத் துக் கொண்ட அகத்திணை யொழுக்கத்தைக் கைக்கிளை

முதலாப் பெருந்திணை யிறுவாயாக எழுவகைப்படுத்து, முதல் நின்ற கைக்கிளையையும் இறுதியில் நின்ற பெருந்திணையையும் நீக்கி ஏனை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலையென்னும் நடுவணைந்திணைகளை மட்டும் அகவொழுக்கத்துக்குச் சிறப்பா யெடுத்து,

"இன்பமும் பொருளும் அறனுமென் றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"*

யெனக் காதலொடு புணர்த்துத் தழூவி விளக்கினமையின் அவ் வைந்திணை யொழுக்கம் மட்டுமே காதலொழுக்க மெனப்படு மென்பதும், ஏனைக் கைக்கிளை பெருந்திணையென்பன அங்ஙனங் காதலுணர்ச்சியானன்றி ஒரு தலைக் காமத்தானுங் கொடும்பெருங் காமத்தானும் நிகழுதல் தெரிதலின் அவைதாம் வெறுங் 'காமவொழுக்க' மெனவேபடுமென்பதும் இனிது பெறப்படு மென்க. ஆகவே மக்கட்கு இயற்கையே நிகழும் ஆண் பெண் வேட்கை 'காதற்காம' மெனவும், 'காமக்காம' மெனவும் இரு வகைப்படுமென்பது நன்கு புலனாகின்றது; காமக்காம மென்பது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியென்னும் ஆண்டன்மை களையும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண் டன்மைகளையும் அடியோடு கெடுத்து மக்களை இருளிற் செறிப் பதாகும்; காதற்காமமென்பது அவ் வறிவு முதலான ஆண்டன் மைகளையும் நாண் முதலான பெண்டன்மைகளையும் அங்ஙனம் அடியோடு கெடுத்து விடாமல், அவற்றைத் தன்வழி யீர்த்து நிகழச்செய்து அவ்வாற்றால் மக்களை ஒளியிற் செறிப்பதாகும்; இவ் வகைப்படூஉம் இவ் விருவகைக் காமங்களுள்ளும், காதற் காமமென்பது படைப்புக் காலந்தொட்டு ஈறுவரையிற் பிறவி கடோறும் உயிர்களைத் தொடர்ந்து வரும் நுண்ணுடம்பினைப் போல், முதலிலிருந்து ஈறு வரையும் ஒவ்வொரு பிறவியினும் பருவுடம்பு அவ்வப்போது அழிந்துங்கூடத் தான் அழியாமல் ஒவ்வொருவரையும் பிணித்தபடியாய்த் தொடர்ந்து செல்வ தாகும்; ஆனற் 'காமக்காமமோ' வெனின், அங்ஙனம் உயிர் களைப் பிணித்துத் தொடர்ந்து செல்வதன்றாய்ப் பருவுடம்பு

* தொல், களவு, க.

அழியுங்காலெல்லாம் உடனழிந்து போவதாகும்; ஆகையாற் றான் நடுவணைந்திணை யென்னுங் காதற்காமம் ஆசிரியரால் மிகச் சிறந்ததா யெடுத்து விளக்கப்படாநின்றதூஉ மென்பது; ஆயினும், நடுவணைந்திணைக் காதலும் கைக்கிளை பெருந்திணைக் காமமும் ஒவ்வோருயிர்க்கும் உள்ளன. நடுவணைந்திணைக் காத லொழுக்கத்துள்ளுங் கைக்கிளை பெருந்திணைக் காம வொழுக் கங்கள் கட்டாயம் நிகழ்ந்தே வரும்; இதனைக் 'கைக்கிளைத் திணை'க் கட்டுரையினுங் குறித்தாம். ஆயினும் அவை அவ் வைந்திணைக் காதலை மீறுமல் அதன் வழியே ஒத்து அக்காத லிருவருள் எவரும் எஞ்ஞான்றும் இழிவெனக் கருதுதற் கில்லாதவாறு அடக்கமாய் நிகழா நிற்கும்; அங்ஙன மன்றி அவை மீறுங்கால் ஐந்திணை யொழுக்கத்தைக் கெடுத்துத் தாம் மட்டுமே விளங்கி அம மக்களுணர்ச்சியைக் கதுவித் தம் வண்ண மாக்கிக் கைக்கிளை பெருந்திணைகளாய் மாறு மென்பது. என வே ஆசிரியர் இக் கைக்கிளை பெருந்திணை யொழுக்கங்களையும் அகத்திணையிலடக்கி உரை கிளந்ததன் உண்மை இங்குப் பொருத்தமாய்க் காணப்படுகின்றமை கண்டு கொள்க.

அகத்திணையுண்மைகள் இவ்வாறிருப்பவும் இந் நுணுக்கம் அறியாதார் சிலர் நடுவணைந்திணை யொழுக்கம் நிகழப் பெறு வார் மாட்டுக் கைக்கிளை பெருந்திணை யொழுக்கங்கள் நிகழா வெனவும் அவைதாம் நிகழப் பெறுவார்பால் ஐந்திணை யொ ழுக்கம் நிகழா தெனவுந் தமக்குத் தோன்றியவாறே கருதினர்; அங்ஙனங் கருதியதூஉமன்றிக் கைக்கிளை பெருந்திணை யொ ழுக்கங்கள் பொருந்தா வொழுக்கங்களாகக் காணப்படுதலின், அவைதம்மை எடுத்துக் கூறுந் தொல்காப்பியச் சான்றுகொண் டே அவ்வொழுக்கங்களும் அவ்வொழுக்கங்களின் விளைவாகப் புறம்படும் பலபலப் பொருந்தாச் செயல்களும் பழக்க வழக் கங்களு மெல்லாம் தமிழ் மக்கள்பாற் பண்டு தொட்டே நிகழ்ந்துவருகின்றன வென்பதும் அவ்வாற்றுல் ஆசிரியர் தொல்காப்பியனார் முதலாகவே தமிழ் மக்கள் சில வகைகளில் நாகரிக மில்லாதவர்களாய்க் காணப்படுகின்றன ரென்பதும் பெறப்படுமெனவுங் கூறு நின்றனர். தொல்காப்பியனார் தமிழ்

மக்கட்கு மட்டுமேயன்றி உலகத்தில் அனைத்து மக்கட்குமே பொதுவில் நிகழும் அகத்திணை யுண்மைகளைக் கருதிப் பார்த்துக் கூர்ந்தாராய்ந்து தாங் கண்ட இயற்கை யுண்மைகளை மேற் காட்டியவாறு திறந்தோன்றப் பகுத்து விளக்கித் தம் மொழி மக்கள் நன்கு வாழல் வேண்டுமெனக் கருதி நூலியாத்தாரெனக் கண்டனராயின், அவர் அங்ஙனமெல்லாங் கூறுர். நடுவணைந்திணை யொழுக்கத்தின் வழி அடக்கமாய் நிகழுங் காமவொழுக்கமே அளவு மீறுங்கால் கைக்கிளை பெருந்திணைகளாய்க் கருதப்படுமென்னும் இவ்வுண்மை புறப்பொருள் வெண்பா மாலையிலும் அதன் ஆசிரியர் ஐயனரிதனர் அவ்விரண்டு திணைகட்குந் துறைகள் வகுத்துரைக்கு மாற்ருனும் நன்கு தெளியப்படும்; கைக்கிளைத் திணைத் துறைகளைப்பற்றி அத் திணைக் கட்டுரையிலேயே காட்டி யிருக்கின்றேம். எனவே இங்குப் பெருந்திணை யொழுக்கத்துக்குக் காட்டப்பட்டுள்ள துறைகளைப் பற்றிக் காண்பாம். ஐயனரிதனர் இப் பெருந் திணை இலக்கணத்தினைப் ‘பெண்பாற் கூற்’றெனவும் ‘இருபாற் பெருந்திணை’ யெனவும் பிரித்து, அவற்றுள் பெண்பாற் கூற்றென்னும் பகுதியில் வேட்கை முந்துறுத்தல் பின்னிலை முயறல் பிரிவிடை யாற்றல் வரவு எதிர்ந்திருத்தல் வாராமைக்கு அழிதல் இரவுத்தலைச் சேறல் இல்லவை நகுதல் புலவியுட் புலம்பல் பொழுதுகண் டிரங்கல் பரத்தையை யேசல் கண்டு கண்சிவத்தல் காதலிற் களித்தல் கொண்டு அகம்புகுதல் கூட்டத்துக் குழைதல் ஊடலுள் நெகிழ்தல் உரை கேட்டு நயத்தல் பாடகச் சீறடி பணிந்த பின் இரங்கல் பள்ளிமிசைத் தொடர்தல் செல்க என விடுத்தல் என்னும் பத்தொன்பது துறைகளையும், இருபாற் பெருந்திணை யென்னும் பகுதியிற் செலவழுங்கல் மடலூர்தல் தூதிடையாடல் துயர் அவற்கு உரைத்தல் கண்டு கைசோர்தல் பருவம் மயங்கல் மிக்க காமத்தாற் பேசும் ஆண்பாற் கிளவி பெண்பாற் கிளவி வெறியாட்டு பாண்வரவு உரைத்தல் பரத்தை கூறல் விறலி கேட்பத் தோழி கூறல் விறலி தோழிக்கு விளம்பல் பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல் பிறர் மனைத் துயின்றமை விறலி கூறல் தலைவியை விட்டு நீங்குதல் பொல்லா

தெனக் கூறல் கருதித் தலைவன் நீங்குங்கால் அங்ஙனம் அவன் நீங்கிப் பெற விழைந்த குறுகிய புகழைப் பழித்துக் கூறுவதான குற்றிசை அவனது குறுகிய விருப்பங் கெடும்படி சொல்லுவதான குறுங்கலி எனப் பதினேழு துறைகளையுங் கூறுகின்றார். இத் துறைகளெல்லாம் பெரும்பான்மையும் நடுவணைந்திணை யொழுக்கத்தின்கண்ணும் வருவனவேயாகு மென்பது நன்கு தெரிந்ததொன்று. அவ் வைந்திணை வழியாய் நிகழும் இத் துறை நிகழ்ச்சிகளெல்லாம் அளவு மீறுங்காற் பெருந்திணைத் துறை நிகழ்ச்சிகளாய்க் கூறப்படுமென ஐயனாரிதனார் கருதிய கருத்துச் செவ்வையாய்ப் புலனாகின்றது; ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தை வெண்பாமாலை யாசிரியர் இத்துணை நுட்பமாய் நுணுகியுணர்ந்து துறை விளக்கங் கூறினமை பெரிதும் வியப்பினை விளைவியா நின்றது.

இதுகாறுங் கூறியவாற்றால்; நம் தெய்வப் பெற்றி வாய்ந்த ஆசிரியர் தொல்காப்பியனார் அனைத்துயிர்கட்கும் நிகழும் அகவொழுக்கங் காதலாமாறுங் காமமாமாறுங் கண்டுணர்ந்து அவற்றை எழுவகைப் படுத்து, அவற்றுட் காதலாமாறு நடுவணைந்திணை யுணர்ச்சி யெனவுங் காமமாமாறு ஏனைக் கைக்கிளை பெருந்திணை யுணர்ச்சிக ளெனவுங் கூறி, அவைதம்மில் நடுவணைந்திணைக் காதலே சிறந்த தெனவும் ஏனைக் கைக்கிளை பெருந்திணைக் காமங்கள் அதன்வழி யடங்கி நிகழற்பாலன வெனவும் விளக்கி, நடுவணைந்திணையைப் பாராட்டாக் குறையினால் அங்ஙன மவை அதன்கண் அடங்காது மீறுங்கால் அவை கைக்கிளை பெருந்திணைகளென்னும் பெயரியவாய்ப் பொருந்தா ஒழுக்கங்களென்று கருதப்படுமெனத் தெளிவித்தா ரென்பது இனிது பெறப்படும்.

சைவஎல்லப்ப நாவலர்

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M.A., L.T.,]

திருவிரிஞ்சைப் புராணம்

சைவ எல்லப்ப நாவலரையும் அவர் நூல்களையுங் குறித்து முன் எழுதிய பொழுது அவர் நூல்களு ளொன்றாய **திரு விரிஞ்சைப் புராணம்** "நெடு நாண்முன்னர் [கி. பி. 1864] அச்சிட்டு வெளிப் படுத்தப்பட்டும் போற்றுவா ரில்லாமையால் அகப் படுவது அருமையாயிற்று" என்றெழுத நேர்ந்தது. சென்ற 1928 ஆ இறுதியில் அச்சிட்டு இவ்வாண்டு [1929] தொடக் கத்தில் பதிவு செய்யப்பட்ட திருவிரிஞ்சைப் புராணப் பதிப்பு அஃதெழுதிய பொழுது என் கைக்கு எட்டிற்றிலது. இப் பதிப்பு முற் பதிப்பிலுள்ள மூலமும் காஞ்சிபுரம் சபாபதி முத லியார் எழுதிய பொழிப்புரை குறிப்புரைகளும் வேலூர்த் தமிழ்ப் பண்டிதர் திரு. T. P. கோதண்டராம செட்டியார் எழுதிய சிலகுறிப்புக்களும் சேர்த்து விரிஞ்சிபுரம் போர்டுபாட சாலை ஆரம்ப ஆசிரியர் திரு. T. கோவிந்தராஜுலு நாயுடு வால் வெளியிடப் பட்டதாகும். இப்பதிப்பைக் கண்ட பொழுது எனக்கு மிக்க ஆனந்த முண்டாயிற்று. இது போலவே மற் றைத் தலங்களிலுள்ள பக்தரும் அவ்வத் தலங்களுக்கு ஆன் றோர் செய்து ஒரு காலத்து அச்சிடப்பட்டும் இப்பொழுது அரிதாயின புராணங்களையும் அச்சுக்கு வராமலிருப்பனவற் றையும் முயன்று வெளியிடுவராயின் அது பேருபகாரமாயி ருக்கும். அவ்வத் தலங்களிலுள்ள ஆலய தர்மகர்த்தர்களே இத் தொண்டாற்ற முன் வரலாம். ஆலய வுற்சவகாலங்களில் தரிசிக்கவரும் பக்த கோடிகளிற் சிலர் புராணப் பிரதிகளை விலைக்குப் பெறுவாராயினும் அஃது அத் தலத் தாலயத்திற்குப் பேரூதியமாகும்.

இனி, **திருவிரிஞ்சைப் புராணப்** புதிய பதிப்பு முகவுரையில் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. "இது வைப்புத்தலங் களுள் ஒன்று. யாரால் வைக்கப்பட்ட தெனில் 'பரமசிவத்தி

னிடம் முதலில் தோன்றிய சத்திபால் வைக்கப்பட்டது.'' கௌரீபுரச் சருக்கத்தில் 74-வது செய்யுளில் "செந்தமிழ் குலவு மத்தலத்தில்'' என்னுஞ் சொற்றொடர்க்குக் காஞ்சீபுரம் சபாபதி முதலியார் "தமிழ்வேத மாகிய தேவாரப் பதிகம் விளங்கிக்கொண்டிருக்கின்ற அந்தத் தலத்தில்'' என்று பொழிப்புரைத்து, குறிப்புரையாக "இந்தத் தலம் வைப்புத்தலத்தி லொன்றா யிருப்பதனால் பதிகம்பெற்றதலமே'' என்றெழுதினர். வைப்புத்தலம் என்பதற்குத் தனக்கெனத் தேவாரப் பதிகம் பெற்றில தாயினும் தேவாரத்துள்ளே பெயரோதப் பட்டது என்னும் பொருளே யான் இது வரை யறிந்திருந்தது. பதிப்பாளர் கூறும் பொருள் நவீனமாயிருக்கின்றது. இன்னும், அவர் இப்புராணத்திற்கு முதனூல் ஸ்காந்த புராணம் உருத்திர சங்கிதை யென்றனர். ஆசிரியர் வடமொழி யென்றுரேயன்றி வேறு விவரமொன்றும் சொல்லிற்றிலர். அருணாசல புராணத்திற்கு மூலம் அது வென்றனர். இன்னும், இத்தலத்தில் சிம்மதீர்த்த மென்றொரு புஷ்கரிணி யுளதாம்; "இது ஸ்ரீ ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளால் பீஜாக்ஷரப் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. ஸ்நானஞ் செய்தார் பாபம் பறக்குங் குறி இன்றுங் காணப் பல ஆண்மக்கள் பெண்மக்கள்பா லமைந்த பைசாசம், முனி, மோஹினி, டாகினி, பில்லி, சூனியம் பலவும் விட்டு ஓடும்''. இறுதிச் சருக்கமாகிய பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கத்துக் கதையைச் சுருக்கி யுரைப்பவர், அருணையம்பதியில் முடி காண்கிலாது அவத்தை யுற்ற அயன் குறை நிறைவேற வேண்டி இவ் விரிஞ்சைப் பதியில் ஆதி சைவப் பிராமண குலத்தில் சிவசருமனாகப் பிறந்தான் என்றனர். பிரமனையும் சிவ சருமனையும் பிணைத்தற்கு எல்லப்ப நாவலர் புராணத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. மற்று இத் திருமுடி வளைத்த ஐதிகம் ஆண்டுதோறும் கார்த்திகைக் கடை ஞாயிறன்று வைகறையிற் காட்டப்படுகிற தென்பது விரிஞ்சிபுரம் தரிசிக்கச் செல்வோர் அறிந்து வைக்க வேண்டியதே.

முகவுரையை விட்டு நூலுட் கூர்ந்து நோக்குவோர் பலவிடங்களில் பிழைகளிருத்தலைக் காண்பர். முதற் பதிப்பு சுத்த

மான பதிப்பு. அதனைப் பார்த்து அச்சிட்ட இரண்டாம் பதிப்பில் பிழைகள் நேர்ந்தமை மனவருத்தந் தருவ்தாயிருக்கின்றது. இக்குறை காணப்படுவது இப்பதிப்பில் மாத்திரமே யன்று; இக்காலத்து வெளிவரும் நூல்களிற் பெரும்பாலனவற்றின் கதி யிதுவே. கவனக்குறைவே இதற்குக் காரண மென்பதுறுதி. நூல்க ளச்சிடுவோர் தமிழறிந்தாரைத் தெரிந்து அவரையும் கருத்தைச் செலுத்தி நூல்களைப் பரிசோதித்துத் தருமாறு செய்து அச்சிடுவராயின் தமிழுலகம் அந் நன்றியை என்றும் மறவாது.

தெலுங்குப் பழமொழிகள்

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T.,]

[கார் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட தெலுங்குப் பழமொழித் தெரிவினின் றெடுக்கப்பட்டவை.]

1. கடையில் எல்லாம் இருக்கிறது மருமகன் வாயில் சனி இருக்கிறது. [சில அசந்தர்ப்பங்களால் மாமனார் வீட்டுச் சொத்துக்கு மருமகன் கொடுத்துவைக்கவில்லை.]

2. கடையில் இருக்கும் வெல்லம் கோயிலிலுள்ள இலிங்கத்துக்கு நைவேத்தியம்.

3. அடி நாக்கில் வெல்லம் ஆத்மாவில் விஷம் [ஆத்மா - இருதயம்]

4. அடி நாக்கில் விஷம் நுனிநாக்கில் தித்திப்பு.

5. தொடவும் படவும் முடியாத அக்கிரகாரம்.

6. வருகிற வரும்படி யெல்லாம் பூசாரிக்கு, சந்தடியெல்லாம் கங்காளம்மைக்கு.

7. தீட்டுக் காக்க வேண்டாத மருமகனுக்குத் தாய் மாமன் பிள்ளை அவரை மரத்தின்கீழ்ப் போய் விம்மியழுதானும்.

[உறவில்லாதவன் உறவு கொண்டாடுதல்]

8. அந்திய நிஷ்டுரத்தைக் காட்டிலும் ஆதிநிஷ்டுரமே மேல்.

9. எட்டாப் பூ ஈசுவரனுக்கு அர்ப்பணம்.

10. எட்டா மரத்திலுள்ள பழத்துக்கு இச்சைப்பட்டது போல.

11. எல்லாரிலும் நான் தாழ்ந்தவன், என்னிலும் தாழ்ந்தவன் நம்பிராமய்யன்.

12. எல்லாருக்கும் சகுனம் சொல்லும் பல்லிதான் காடிப் பானையில் விழுந்தது போல.

13, எல்லாரும் பல்லக்கேறினால் சுமப்பவர் யார்?

14. அழகுக்குப் பூட்டின ஆபரணம் ஆபத்துக்கு உதவுகின்றது.

15. பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்குப்போல.

16. குருடனுக்குக் கண்ணாடி காட்டியது போல.

17. கூழாறு வந்திருக்கிறது மாமியாரே என்றால் அளவுபடி என் கையிலுள்ளது மருமகளே என்றாளாம்.

18. கூழ் குடிப்பவர்க்கு மீசைகளை ஒதுக்கிப் பிடிப்பவர் சிலரா?

19. அகடவிகட ராஜனுக்கு அவிவேகி பிரதானி, சோம்பேறிப் பரிவாரம்.

20. அக்கன்னனும் மாதன்னனும் பல்லக்கேறினால் ஒப்புக்கு ஸரப்பன் ஏரிகரை யேறினானும்.

21. அகழியில் விழுந்த பூனைக்கு அதுவே வைகுண்டம்.

22. அகஸ்தியர் சகோதரன்.

[அப்பிரசித்தன். அவன் பெயர் யாருக்குந் தெரியாது]

23. மலிந்ததானால் கடைக்கு வருகின்றது.

24. மலிந்ததானால் எல்லாரும் வாங்குவர்.

25. நெருப்புக்குக் காற்று சகாயமாயினாற் போல.

26. நெருப்பிலே விட்டில் பாய்ந்தது போல.

27. அக்கினி ஹோத்திரத்தில் நெய் விட்டாற்போல.

[வளர்ச்சியைக் குறிக்கும். அக்கினி ஹோத்திரம் - வைதிகாக்கினி.]

28. உண்மையாய்த் திருமண் தாரியானால் ஈர்க்குப் பிடிப்பதிலேயே தெரியும்.

[திருமண்தாரி - நாமமிடுபவன்]

29. ஆய்வந்த பூமி அடியளவிருந்தாலும் போதும்.

30. இப்படியானால் வைத்தியக் கட்டணம் அப்படியானால் வைதரணி கோதானம்.

[கோதானம் புரோகிதனுக்கு]

31. ஆப்பம் சுடுகிற அம்மையாருக்கு அறுவர் வேண்டுமாம் உதவி செய்ய.

32. உள்ளங்கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அழுதது போல.

33. நானுக் கேட்கமாட்டேன் எல்லாவற்றையும் இங்கே பெருக்கித்தள்ளு என்றது போல.

34. கேட்கிறவனில் தாழ்ந்தவன் சொல்லுகிறவன்.

[சொல்லுகிறவன் - பதில் சொல்லுகிறவன்]

35. கொடுப்பார் என்று எதிர்ப்பார்த்திருத்தல் துக்கத் துக்குக் காரணம். [வீணுக நம்பியிருத்தல்]

36. காட்டி லெறித்த வெண்ணிலா

37. காட்டு நரிகளுச்குக் கொத்துவால் துரையா?

[துரை - அடக்கியாள்பவன்.]

38. ஆரம்பிக்கிறதற்கு முன்னே ஹம்ஸபாதமா?

[ஹம்ஸபாதம் + - எழுதும்போது விட்டவற்றை மேல் எழுதுதற்கு வரிக்கீழ் இடுங் குறி.]

39. சேற்றில் நட்ட கம்பம். [ஸ்திரமில்லாதது.]

40. குறுக்குச் சுவர்மேற் பூனை.

[இந்தப் பக்கமும் குதிக்கும் அந்தப் பக்கமும் குதிக்கும் நம்பலாகாதவன்]

41. அதிரகசியம் வெட்டவெளி.

42. மாமியார் உடைத்த பானை கீறியிருந்த பானை, மருமகள் உடைத்த பானை புதுப் பானை.

43. மாமியார் பிடிவாதம்

44. மாமியார் செத்த ஆறு மாசத்திற்கு மருமகள் கண்ணில் ஜலம் வந்ததாம்.

45. மாமியார் செத்தால் மருமகள் அழுகிறது போல.

46. மாமியார் செய்த காரியங்களுக்கு நிந்தை கிடையாது.

47. மாமியார் பேரையிட்டுப் பெண்ணைக் குப்பட்டியில் போட்டது போல்.

48. மாமியார் நன்மையும் வேம்பு இனிப்பு மில்லை.

49. மாமியார் இல்லாத மருமகள் உத்தமி, மருமகள் இல்லாத மாமியார் குணவதி.

50. மாமியாரிடமிருந்து திருட்டுத்தனமும் கணவனிட மிருந்து வியபிசாரித்தனமும் கற்றுக்கொண்டது போல.

[இருவரும் சந்தேகிக்கும் இயல்புள்ளவா]

51. மாமியார் வீட்டுச்சுகம் முழங்கையடிக்குச் சமானம்.

[முழங்கையில் அடிபட்டால் நோவு கொஞ்சத்தில் தீருவதில்லை.]

52. மாமியாரும் ஒரு வீட்டு மருமகள் தானே

53. அத்தி பூத்தாற்போல

54. திக்கற்றவனுக்கு ஆசை காட்டக்கூடாது, பலவானுக்கு இடங்கொடுக்கக் கூடாது.

55. அதோ என்றால் ஆறு மாசம்

56. அதுவே பதக்கமாயிருந்தால் நாம் பிழைக்கமாட்டோமா?

[அதுவே - காக்காய்ப் பொன்னும் தறிப்பும் சேர்ந்தாகிய நகை]

57. கண்ணாடி மீது பயறு போட்டது போல

[உருண்டு போய் விடும்]

58. கண்ணாடிக்குள் முடிச்சு.

[காரியத்திற்குதவாது]

59. வாடகைக்கு வந்த குதிரைகள் அகழிகளைத் தாண்டுமா?

60. அதமனுக்குப் பெண்டாட்டியா யிருப்பதைவிடப் பலவானுக்கு வேலைக்காரியாயிருப்பது மேல்.

61. அதிக ஆசை உலக தாரித்திரியம்

[உலக தாரித்திரியம் - பெரு வறுமை]

62. தமக்கு அனுகூலமில்லாத இடத்தில் தாம் பெரியோர் என்று சொல்லிக்கொள்ளக் கூடாது.

63. அன்னத்தில் புத்திக் கூர்மையே யன்றி வித்தையில் புத்திக் கூர்மை யில்லை. [அன்னம் - உணவு.]

64. அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் வைக்கலாமா?
65. அன்னரசத்தைக் காட்டிலும் ஆதரரசம் மேல்.
[ஆதரம் -- அன்பு.]
66. எல்லா மறிந்தவனுமில்லை, ஒன்று மறியாதவனு மில்லை.
67. எல்லாமிருக்கிறது வாழுந்தன்மை யில்லை.
[வாழுந்தன்மை - மாங்கலியம். ஸ்திரீக்கு]
68. அபகாரிக்குக் கூட உபகாரமே செய்யவேண்டும்.
69. கடன் பசிக்கு உதவுமா?
[வேண்டியபொழுது திரும்பிவராது]
70. கடன் ஆபத்து
71. கடன் கொடுத்தவன் நன்மை கோருவான், வாங்கினவன் தீமை கோருவான்.
72. கடனில்லாமற் போனால் உப்புக்கஞ்சியே மேல்
73. கடனில்லாத கஞ்சி தொன்னையளவே போதும்
74. அபத்த பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்.
[கெட்டுப் போனவனுக்கு எப்பொழுதும் கெடுதலே நேரும்]
75. அப்பன் மரித்தால் அந்தத்துணி எனது.
76. அகப்பட்டாற் குடுமி அகப்படாமற்போனால் கால்.
77. அபூர்வமாகக் குழந்தை பிறந்தது, கட்டப்பாரை கொண்டுவாடா காது குத்துகிறேன்.
78. அப்பியாசம் அற்ப வித்தை
[அப்பியாசத்தால் வித்தை எளிதாகிறது.]
79. அப்பியாச மில்லாத ரெட்டி பல்லக்கேறினல் அப்படியும் இப்படியும் ஆச்சாம் [பல்லக்கு மிகவும் ஆடிற்று.]
80. சமைத்து வைத்ததில் மாமியார் விரலிட்டாளாம்.
[தன்னுடைய திறமையாலேயே நடந்ததென்று காட்ட.]
81. விற்கையில் மீந்தது வெள்ளாடு.
82. அம்மை கிருகப்பிரவேசம் ஐயா மயானப் பிரவேசம்.
83. அம்மை தானும் இடாள் பிச்சையெடுத் துண்ணவும் விடாள்.
84. அம்மை பக்கத்தில் கீழே படுத்தாலும் ஒன்றுதான், அப்பா பக்கத்தில் நிலத்தில் படுத்தாலும் ஒன்றுதான்.
[குழந்தைக்கு.]

85. அம்மை வைக்க வேண்டியது நாலையும் அப்பொழுதே நீ வைத்திருந்தால் நான் செய்யமாட்டேனு? [நாலு அடி]

86. விற்கப்போனால் காடு, கொள்ளப்போனால் கொள்ளி. [எவ்வழியிலும் நஷ்டமே]

87. ஆனால் ஆதித்தவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்.

88. ஆனால் தினை ஆகாவிட்டால் துவரை.

89. போனதற்குச் சிந்திக்கிறவன் புத்தி குறைந்தவன்.

90. ஐயாவுக்கு வித்தையில்லை, அம்மைக்குக் கர்வமில்லை.

91. ஐயா தாசரிகட் கிட்டால் அம்மை ஜங்கமர்க் கிட்டாள். [தாசரிகள் - வைணவர், ஜங்கமர் - சைவர்.]

92. ஐயா நெட்டுக் கேட்டு முடியாது, அம்மை தம்மைய பாலத்தில் நெல் குத்திக் குடிக்கிறாள். [கூழ் குடிக்கிறாள்.]

93. ஐயர் வராவிட்டால் அமாவாசை அப்படியே இருக்குமா?

94. ஐயா சூடுபோட வந்தால் எருமை பிழைக்குமா? [சூடுபோடத் தெரியாதவன்]

95. சுவாமி செய்யப்போய்க் குரங்காயிற்று. [சுவாமி - பிள்ளையார் முதலிய கடவுட் பிரதிமை]

96. ஐயர் குடுவைபோல, ஐயர் மனைவி கூடை போல

97. ஐயா ஒன்றே கால் சேர் இலிங்கம் அரைவீசை. [அரை வீசை இரண்டே கால் சேர். அவரை விடக் கன முள்ளது அவரணியும் இலிங்கம்]

98. உள்ளங் கையிலுள்ள இலந்தம் பழத்திற்குக் கண்ணாடி வேண்டுமா?

99. உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுகிறான்.

100. காட்டசத்துப் புலம்புகை. [அரண்யருதிதம்]

முத்துத்தாண்டவர் சரித்திரம்

(பால் கக)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சுசுகூ	1	முடை	முடைய
சுஎக	7	சென்ற றென்றும்	சென்று றென்றும்
,,	13	கொள்வாமே	கொள்வாயே
,,	23	விதத்தைத்	தத்தை,

இறப்பச்சம்

[மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்]

இந் நிலவுலகிலே வாழும் மக்கள் அனைவரும் இறப்பு என்ற சொல்லைக் கேட்ட துணையானே அஞ்சி விதிர்விதிர்க்கின்றனர். முற்றத் துறந்த முனிவரும் இறப்பை அஞ்சிப் பாடிய பாட்டுக்கள் எண்ணிறந்தனவாகக் காணப்படுகின்றன. பழுத்த பழங்களாகவும் நரை திரையோடு கூடியவர்களாகவும் தள்ளாடித் தள்ளாடி விழுகின்றவர்களாகவு முள்ள முதியோரும் மரணபயம் உடையவராக உளர். அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயரும் உண்ணக் கூழுக்கும் உடுக்கக் கந்தைக்கும் ஏக்கற்றுக் கிடக்கும் வறியோரும் சாக்காட்டை விரும்பி ஏற்கின்றார் இல்லை. ஒரு சிலர் தற்கொலை புரிந்து கொள்ளினும் அவர் அதனை விழைந்து கொள்ளுகின்றார் என்று கூறல் இயலாது. இதற்குக் காரணம் யாது? நாம் ஏன் மரணத்துக்குப் பயப்பட வேண்டும்?

மரணம் அடைந்தபின் நமது நிலை இன்னதென நமக்குப் புலப்படவில்லை. நாம் இப்பொழுது காதலித்து வரும் மனைவியையும் மக்களையும் சுற்றத்தாரையும் நண்பரையும் காண்பதற்கும் அவர் இனிய மொழிகளைக் கேட்பதற்கும் இயலாதவர்களாய் விடுகின்றோம். இதனால் நமக்கு இறப்பிலே அச்சம் இயற்கையாக உண்டாகிறது. இறப்பை அஞ்சியே பலர் இளம்பருவத்திலே துறவு பூண்டனர்; அதன் பொருட்டே பலர் உலக வாழ்க்கையை வெறுத்தனர். சிலர் இறப்பை எஞ்ஞான்றும் எண்ணியெண்ணித் துன்புறுகின்றனர். இறப்புத் துன்பம் ஒருவருக்கு ஒருமுறை வருவதாகவும் பலர் பலமுறை அதனை எண்ணுவதனால் பன்முறை அத்துன்பத்தை எய்துகின்றனர். சான்றோர் நம்மை என்றும் இறப்பை எண்ண வேண்டுமென ஆங்காங்கு அறிவுறுத்தியும் வருகின்றனர். உலக நெறியிலே படிந்து கிடந்து தன்னலம்பற்றியே வாழ்வோர் பெரும்பான்மையும் பட்டிமை பயின்றொழுகுதற்கும் உரியர் ஆதலின் ஆன்றோர் அடிக்கடி நமக்கு உடல் நிலையாமை முதலியவற்றை வற்புறுத்

திக் காட்டுகின்றனர். ஆனால் மரணபயம் வேண்டுமா? 'வேண் டாமா? என்று ஆராய்ந்து பார்ப்பின் அது வேண்டற்பால தன்றென்ற முடிவே இக்காலத்துக்குப் பொருந்துமெனத் தோன்றும். ஏனெனில் மரணபயம் உடைய ஒருவன் எவற்றை யும் செவ்வனம் செய்ய மாட்டுவான் அல்லன். அவனுக்குக் கற்றற்கும் கேட்டற்கும் மனவெழுச்சி உண்டாதல் இல்லை. அவன் எப்பொழுதும் ஏங்கி நிற்கின்றான். அவனுக்கு நாளடை வில் உடனுக்குடன் தோன்றும் அச்ச உணர்ச்சியினால் நெஞ்சுரம் அழிந்துவிடும். அப்பால் தொட்டதற்கெல்லாம் திகிலடைந்து உயிர் துறப்பான்; அவன் வாழ்க்கை அளிக்கத் தக்கதாக உளது. எத்துணையோ பலர் தம் மகவுக்குச் சிறிது நோய்வரின் தட்டுக் கெட்டுத் தடுமாறித் தமது நிலை குலையப் பெறுகின்றனர்; தமக்கு நோய் சிறிது அணுகப்பெறின் அஃது உடனே முதிர்ந்து தமது உயிருக்கு உலை வைத்து விடுமெனக் கருதி ஆகாயக்கோட்டை கட்டி அறிவிழக்கின்றனர். அந்தோ! வாழ்க்கை இத்தகைய அச் சத்தால் எவ்வளவு பெருந் துன்பத்திற்குக் காரணமாக உளது. இந்நிலையில் நரகத்திலே வாழ்வோர் தன்மை பெரிதும் இரங்கற் பாலது. 'கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டை' என்றும் 'காட்டிற் புலியால் இறந்தவர் சிலர்; ஆனால் வீட்டிற் கிலியால் இறந்தவர் பலர்' என்றும் போந்த கட்டுரைகளால் அச்சத்தால் விளையும் அருங் கேடுகள் இனிது விளங்கும்.

அச்சமே மக்கட்கு உள்ள எல்லாப் பகைகளிலும் பெரி யது; அச்சம் காரணமாகவே பெரும்பாலும் பைத்தியம் பிடிக் கிறது. அச்சம் உடையவர்களே தமது காரியங்களைச் சிக்கறச் செய்யும் ஆற்றல் இல்லாதவராகக் காணப்படுகின்றனர். அச்சம் பற்றியே தற்கொலை செய்து ஆவி துறக்கின்றனர். அச்சம் உள்ளவரே எல்லாவற்றிற்கும் தாழ்ந்த நிலையை அடைவர். எல்லாத் துணிவிற்கும் அடிப்படையாக உள்ளது இறக்கத் துணி தலே யாகும். இறப்பை அஞ்சாத ஒருவனை உலகம் அஞ்சும். அவனே எல்லாரினும் மேம்பட்டவனாவான். உடம்பின் மேலிருக் கும் பற்றை விட்டு நன்னெறிக்கண்ணே நாடோறும் செல்கின்ற பெரியோனைக் காட்டினும் சிறந்த செல்வன் யார்? அவனைப் பணி

யாத உயிரும் உண்டோ? அவன் அஞ்சத் தக்க பொருளும் உளதோ? அவன் அஞ்ச வருவதும் ஒன்று மில்லை. அவனே நமனை அஞ்சாதவன்; அவனே பேரின்பப் பெரு வாழ்விலே திளைப்பவன்.

ஒருவர் உலக நிலையாமையை எண்ணி மனைவி மக்களை விட்டுக் காட்டிலே சென்று குகையிலே ஒதுங்கி வாழ்ந்தார். அங்கே அவருக்குப் புலி புறப்படுமோ? அரிமா வருமோ? பாம்பு கடிக்குமோ? பேய் பிடிக்குமோ? என்னும் அச்ச உணர்வுகள் பிறந்தன. பின்னர் அவரிடம் பலர் வருதற்குத் தொடங்கினர். வருபவரிடம் வாதிப்பதும் தமது கொள்கையைச் சாதிப்பதும் அவருக்கு வேலைகளாக முடிந்தன. அப்பால் இஃது ஒரு குடும்பமேயாம் என உற்றுணர்ந்து அக்குகையை விட்டு ஓடினார். அங்ஙனம் ஓடியவரைக் குறுக்கிட்டான் ஒரு தறுகண் மிக்க கொலைஞன். அவன் துறவி யாவரையும் துரும் பெனக் கருதுபவன்; கொலையே விளையாட்டாக உடையவன்; கள்ளிலே களியாட்டயர்பவன்; காமமே பொருளெனக் கொண்ட வன். அவன் இத்துறவியைக் கண்டதும் எதிரே நின்று வாளோச் சினான். துறவி நடு நடுங்கி அஞ்சி அவன் அடியிலே விழுந்து உயிர்ப் பிச்சை கேட்டு ஓடி ஒளிந்தார். பின்னர்த் தனியே இருந்தும் துறவியின் மனத்திலே கொலைஞன் வாளோச்சி வரு தல் அடிக்கடி தோன்றலாயிற்று. அதனால் அவருக்கு அச்சமும் அவலமும் உண்டாகி அவரைத் துன்புறுத்தலாயின. இத்துன் பம் அவர் உயிரைச் சிறிது சிறிதாக அரித்துத் தின்னத் துவங்கி யது. இங்ஙனம் இருப்புழி ஒருநாள் துறவி பின் வருமாறு சிந்திக்கலானார். "என்னே! என்னே! ஒருநாள் கண்ட கொலை ஞன் காட்சி உடனுக்குடன் என் நெஞ்சிலே தோன்றி என் அறிவையும் ஆற்றலையும் அழித்து என் உயிரைக் கொள்ளை கொள்கின்றது? நான் நினையாத முன்னும் என் எண்ணம் இடை விட்ட பொழுதெல்லாம் இடையிட்டுத் தடை செய்கின்றது. எல்லாரும் ஒரு நாள் இறப்பர்; நானோ ஒவ்வொரு நாளும் இறந்து வருகின்றேன். இல்லைத் துறந்து வந்த நான் பொருளை வெறுத்தேன்; பொங்கெழில் வாய்ந்த நங்கையை வெறுத்தேன்;

பான்மண மருக் கான் முளையை விட்டேன்; குடி யிருந்த வீட்டுக்குக் கொள்ளி வைக்கக் கருதிய பட்டினத்தாரினும் மேன்மை யுடையவன் போல வருந்திப் பெற்ற அருந்தவத் தாயையும் சிந்தை நொந்த தந்தையையும் விட்டு நீங்கினேன்; அறவுபதேசம் கேட்க வந்த நண்பரையும் அகல நீங்கினேன். இத்துணையும் துறந்த யான் வெறும் மயக்கத்தினால் கண் முன்னே வராத ஒருவனை வந்ததாகவும் புலி பாம்பு முதலியன போந்ததாகவும் நினைந்து அந்தோ! அல்ல லுழக்கின்றேன். இஃது எற்றினு லுயிற்று? இக்கேட்டிற் கெல்லாம் காரணம் நான் எல்லாம் துறந்தும் ஒன்று துறந்திலேன். அஃதாவது உடற்பற்றே ஆகும்: அதனை இன்றே துறப்பேன்; நான் இன்றே இறப்பினும் நன்றே; அதுபற்றி இனிச் சிறிதும் அஞ்சேன்; பாம்பு கடிக்கினும் கடிக்க; புலி பாயினும் பாய்க; கொலைஞன் கொல்லினும் கொல்லுக; என்ற உறுதி பிறக்கப் பெற்றவராய் இருந்தார். அன்று முதல் அவர் நெஞ்சம் அச்சம் இன்றி இன்ப நிலையிலே நின்றது. இன்ப வெள்ளம் அவர் உள்ளத்திலே ஊற்றெடுத்து ஓடியது. அவர் அவ் வுண்மையினை அனைவருக்கும் எடுத்துரைக்கப் பேரவாக்கொண்டனர். அப்போது ஒருநாள் வனத்திலே யாதொரு குறிக்கோளு மின்றித் திரிந்து வருகையில் அவருக்குத் தாம் முன்னே பார்த்த கொலையாளி ஞாபகம் திடுமென வந்து விட்டது. வந்ததும் அவர், "நல்லது; அக்கொலைஞன் இன்று என் முன் வரின் அவனுக்கு அவன் அடாத செயல்களைப் பற்றிக் கழறுவேன்; அறத்தைப் புகட்டுவேன். ஐயோ! அவன் வீணே கெட்டழிகின்றான்; அவன் வாளோச்சலையும் மருட்டலையும் அணுவளவும் அஞ்சேன்! அஞ்சேன்!" என்று தமக்குள் முணு முணுத்துக்கொண்டு ஏறிட்டுப் பார்த்தார். உடனே தம் எதிரே ஒரு வீரன் வாட் படையுடன் பரிமா இவர்ந்து விரைந்து வருதலைக் கண்டார். அவன் அவர் முன்னர்த் தோன்றிப் புன்முறுவல் செய்தான். துறவி துணுக்குறாது எதிர் நின்று அவனை நோக்கிக் கை யமர்த்தி, "வீரனே, தீதின்றே?" என்று பெருமிதமாகக் கூறி இள நகை அரும்பினார். வீரன் அவரை நோக்கி, "ஐயா என்னைக் கண்டதும் அரிமாவைக் கண்ட நரிமாவைப்போல நடுங்கும் நீர் இன்று

இத்துணைத் துணிவுடன் எதிர்த்து நிற்பதன் காரணம் என்னை?" என்றான். அதற்குத் துறவி, "அப்பா, இனி நான் யாருக்கும் அஞ்சேன்; உலகத்துக்கு அப்போது அடிமையாக இருந்தேன்; இப்போது உலகம் எனக்கு அடிமையாகி விட்டது. உனக்கு உன் தீய செயல்களைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கண்டித்து நல்லறிவுச்சுடர் கொளுத்த எண்ணினேன். நீயும் நல்ல வேலையாக எதிர்ப்பட்டாய்; இனி இத் தீமைகளைச் செய்யாமல் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவனாய் இனிது வாழ்வாயாக," என்றார். வீரனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது; புலி போலச் சீறினான்; அவன் விழிகள் தீயை உமிழ்ந்தன; மீசை துடித்தது; "யாது சொன்னாய்? நேற்றுக் கோழைபோல அபயம் பெற்றுச் சென்ற நீ, இன்று வீரனாகிய நம்முன் அஞ்சாது போந்து அறம் உரைக்கின்றனையோ? இதோ ஒரே வீச்சில் உன்னை எமனுலகுக்குக் குடியேற்றுகின்றேன்," என்று கூறித் தனது வாளை ஓச்சினான். துறவியும் இம்மியும் துணுக்குறாமல் அவன் வெட்டை எதிர்த்து நின்றார். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை; வாளை உறையிலே இட்டான்; வாளாது குதிரையைச் செலுத்திக் கொண்டு விரைந்து பறந்தான். துறவி உண்மையைக் கண்டார். "என் உயிருக்கு அஞ்சிய பொழுதெல்லாம் நான் ஓடினேன்; அதற்கு அஞ்சாத பொழுது கொலைஞனும் ஓடினான். இனி என்னினும் உயர்ந்தார் யார்?" என்று கருதிச் செம்மாந்து சென்றனர்.

இக்கதையினால் மரண பயத்தினின்றும் விடுபடுவதனால் விளையும் நலங்கள் இவை என நமக்குப் புலப்படவில்லையா? ஆகவே ஒவ்வொருவரும் இறப்பச்சத்தை அறவே விட முயலல் வேண்டும். தன் உடம்பிலே உள்ள பற்றை விட்ட ஒருவனுக்கு மனைவி மக்கள் பொருள் முதலியவற்றிலே பற்று ஒழிதல் சாலவும் எளிது. ஆனால் இஃது அருளாலன்றி வாய்க்காது என்றும் அவ்வருள் எளிதிலே வாராதென்றும் கூறிச் சிலர் நெகிழ்கின்றனர். அருள் எப்பொழுது கிடைக்கும்? நாம் மேலே கூறிய மனப்பான்மையினை அடைந்த பின்னரேயாம். அப்பொழுது எல்லாம் தாமே வந்தடையும்.

இதனால் உலக வாழ்க்கையிலே வெறுப்புற்றுக் கிடக்க வேண்டும் என்றுதல், மனைவி மக்களிடம் கொஞ்சிக் குலாவுதல் கூடாது என்றுதல், பொருளை யீட்டலாகாது என்றுதல் நாம் கூற வில்லை. உலகத்திலே நன்கு வாழலாம்; மனைவியைப் பாராட்டலாம்; மக்களைச் சீராட்டலாம்; நண்பரைக் கூட்டலாம்; பொருளை நல்வழியிலே ஈட்டலாம் ஆனால் எத்தொழிலைச் செய்தாலும் தனக்கென்றே வரைந்து கொள்ளாமலும் பிறர் நலத்தைக் கெடுக் காமலும் தன் கடமையினைச் செய்துகொண்டு பிறவற்றை யெல் லாம் கடவுள் திருவருள் என இருத்தலே செய்யத் தக்கதாம். உதாரணமாக, குழந்தைக்கு நோய் வந்ததெனக் கொள்ளுவோம். அதற்குச் சிறிதும் மனந்தளராமல் தக்க மருத்துவரைக் கொண்டு பரிகாரம் செய்யலாம்; அக்குழவிக்கு யாது வருமோ என அஞ்ச வேண்டுவதில்லை. கடமையை முற்றும் கருத்துடன் செய்து பிறவற்றைப்பற்றி நாம் எண்ணுமல் இருத்தல் வேண்டும். இங்ஙனமே எல்லாவற்றிலும் உள்ளத்தைத் திருத்திக் கொள்ள நாடோறும் பாடுபட வேண்டும். தீய எண்ணங்களைத் தியானத்தி ஞல் ஒழிந்து நல்லெண்ணங்கள் ஓங்கி வளரும்படி செய்தல் வேண்டும். மெல்லிய இனிய சொற்களைப் பேசப் பழக வேண் டும்; இறப்பை அஞ்சாதவனும் தீவினை செய்தலை அஞ்ச வேண் டும். தனக்காகச் செலவு செய்தலைக் குறைத்துக்கொண்டு பிற ருக்கு நன்மை செய்ய முன் வர வேண்டும். பிறருக்கு நன்மை செய்பவன் நல்லவனே யன்றித் தன்னளவில் அமைந்து யாருக் கும் தீமை செய்யாதவன் நல்லவனுக அறிஞரான் எண்ணப் படான். உணவு, துயில், இணைவிழைவு முதலான எவற்றினும் பத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும். துயிலுக்கும் இணை விழைச்சுக்கும் உண்டியே காரணமாக இருத்தலின் அதனையே முதற்கண் ஒழுங்குற அமைத்துக்கொள்ள வேண்டும்.

—சித்தாந்தம்.

பண்டித ஜவார்லால் வரலாறு

லாகூர் காங்கிரசுக்குத் தலைமை வகிக்கும் பண்டித ஜவார்லால் நேருவின் வரலாறு மிகவும் அற்புதமானது. பண்டித ஜவார்லால் நேரு செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்தவர். மிகவும் நெருக்கடியாக உள்ள அரசியல் துறையில் இறங்கிப் பத்து வருஷங்களுக்குள்ளாக நாட்டின் அரசியல் உலகில் உயரிய பதவியை அடையலானார். பண்டித மோதிலால் நேருவிற்கு ஒரே செல்வப் புதல்வராகிய இவர் 1888-வது வருஷத்தில் அலாகாபாத்தில் பிறந்தார். செல்வத்தால் எவ்வளவு சுகத்தை அனுபவிக்க முடியுமோ அவ்வளவு சுகத்தையும் பண்டித ஜவார்லால் நேரு தனது குழந்தைப் பருவத்தில் அனுபவித்தார். அவர் சிறுவயதாயிருக்கும் பொழுது ஆங்கிலம் படிப்பதற்கு முன்னதாகப் பிரஞ்சு பாஷை பயிலலானார்.

இங்கிலாந்து பிரயாணம்

தனது 12-வது வயதில் கல்வி பயில இங்கிலாந்திற்குச் சென்றார். அங்குச் செல்வவந்தர் குடும்பத்துக் குழந்தைகள் படிக்கும் ஹாரோவிலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். அங்கு இவருக்கு நேரிட்ட ஓர் விநோதமான சம்பவத்தைக் குறித்து வேடிக்கையாகப் பேசுவதுண்டு. அதாவது ஹாரோவிலுள்ள மாணவர்கள் செல்வவந்தர்களாக இருந்தபோதிலும் அவரவர்களது பூட்சுகளை அவரவர்களே சுத்தஞ் செய்துகொள்ள வேண்டும். ஒரு நாள் பண்டித மோதிலால் நேரு அப் பள்ளிக் கூடத்திற்கு விஜயஞ் செய்திருந்தபொழுது தனது மகன் பூட்ஸ் துடைத்துக்கொண் டிருப்பதைக் கண்டு மனம் நொந்து, அவ்வேலையைச் செய்ய ஒரு வேலைக்காரனை நியமிக்கும்படி உபாத்தியாயரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தனது பையனிடம் தெரிவித்தாராம். பண்டித ஜவார்லால் அவ்விதமே தனது வாத்தியாரிடம் கேட்க, அது பள்ளிக்கூட ஒழுங்கிற்கு விரோதமென்றும், அச் சிறு காரியங்களைச் செய்வதற்கு வேலைக்காரனை எதிர் பார்க்கலாகாதென்றும் தெரிவித்து, அவ்விதம் கேட்டதற்குத் தண்டனையாக மற்றுஞ் சில

மாணவர்களின் பூட்சுகளையும் சேர்த்துச் சுத்தஞ் செய்ய வேண்டு மென்று உபாத்தியாயர் உத்தரவிட்டாராம்.

ஹாரோ பள்ளிக்கூடத்தில் தனது கல்வி முடிந்தவுடன் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை சென்று படித்து அங்குத் தனது எம். ஏ. பட்டத்தைப் பெற்றார். அதன் பிறகு வக்கீல் பரீட்சையிலும் தேறினார்.

கேம்பிரிட்ஜில் இவ் விளம் காஷ்மீரி பிராமணச் சிறுவர் உயர்ந்த ஆங்கில வகுப்பினரிடை கலந்து வாழ்ந்து வந்தார். தன்னாட்டு மாணவர்களுடன் கலப்பதற்குக் கூட இவருக்கு மனம் பிடிப்பதில்லை. இங்கிலாந்தில் தனது கல்வியை முடித்துக்கொண்டு பண்டித் ஜவார்லால் நேரு இந்தியாவிற்குத் திரும்பிவந்த பொழுது, அவருடைய தந்தை பண்டித மோதிலால் நேரு அலகாபாத்தில் அங்குள்ள வக்கீல்கள் எல்லோரிலும் சிறந்த வக்கீலாக இருந்தார். லட்சக்கணக்காக வரும்படி வந்து கொண்டிருந்தபடியால் ராஜவாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய குமாரர், அதிலும் இங்கிலாந்திலுள்ள சர்வ கலாசாலையில் பூர்ண கல்விகற்றுத் தேர்ச்சியுடையவர். இந்தியா வந்ததும் தனது தந்தையுடன் கூட வக்கீல் தொழில் புரிந்து வந்தார். தந்தை செல்வமும், அறிவும், சிறப்பு முடையவராக இருந்தபடியால் தனத்திலும், கல்வியிலும் சிறந்த குறிப்பிட்ட சில பெரியோர்களிடை மட்டும் இவர் பழகி வந்தார்.

தேசத் தொண்டு

இப்படிப்பட்ட ஒருவர், நாட்டின் பாமர மக்களையும் சரி சமானமாகக் கருதுவதற்குக் காரணமாக விருந்த மகாத்மா காந்திக்கு இதுவோர் வெற்றியேயாகும். ஆச்சரியப்படக் கூடிய விதமாகப் பண்டித ஜவார்லால் இவ்வித மாற்ற மடைந்ததற்கு ஒரே ஒரு காரண மட்டும் நம்மால் தெரிவிக்க முடியும். அதாவது அவர் இங்கிலாந்தில் மிக சுதந்திரமுடன் வாழ்ந்து வந்தார். இந்தியா வந்தவுடன் இந்நாட்டின் அடிமை வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டார். இரண்டுக்கு முள்ள வித்தியாசம் தெற்றென அவருக்குப் புலப்படவே தனது தாய்

நாட்டுச் சேவையில் தனது அரிய வாழ்க்கையைத் தியாகம் செய்யத் துணிந்துவிட்டார்.

1919வது வருஷத்தில் அவரது பெயர் புகழ் பெற ஆரம்பித்தது. ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்ட யுத்தம் நின்றது. யுத்த சமாதானத்திற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. சமாசத்திற்காக ஆப்கனிஸ்தானத்திலிருந்து வந்த ஸ்தானிகர்கள் முசோரியில் தங்கியிருந்தார்கள். அது சமயம் அந்த ஸ்தானிகர்கள் இருந்த பிரபலமான விடுதியில், பண்டித ஜவார்லால் நேரு, தனது தாயாருடனும், சகோதரிகளுடனும் அங்குத் தங்கியிருந்தார். அப்பொழுது ரகசிய போலீசார் அவர் அங்கிருப்பதால் சமரசப் பேச்சிற்கு இடைஞ்சலாக இருக்குமென்று கருதி அவர் அங்கிருக்கலாகாதென்று அவரை வெளியேற்றினார்கள்.

1920-வது வருஷத்தில் அவர் அதி தீவிரமான அரசியல் வாதியாகி விட்டார்.

சிறை வாசம்

அதன் பயனாக 1921-வது வருஷம் அவர் சிறை செல்ல நேரிட்டது. ஆறு மாதம் சிறைவாசம் செய்து விடுதலை யடைந்ததும் இன்னும் அதிக தீவிர வாதியாகவே வெளியில் வந்தார். தேசத் தொண்டர்கள் இயக்கத்தைப் பலமாக ஸ்தாபிப்பதற்காக உழைத்து வந்தார். அந்நியத் துணி பகிஷ்கார சம்பந்தமாக 1922-வது வருஷம் அவரைப் பழையபடி கைதுசெய்து அவருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதித்தார்கள். ஆனால் 1923-வது வருடத்தில் தேசீயக் கைதிகளை விடுதலை செய்யும் பொழுது அவரையும் விடுதலை செய்தார்கள்.

1923-வது வருஷத்தில் பண்டித ஜவார்லால் நேரு அலகாபாத் முனிசிபாலிட்டிக்குத் தலைவரானார்.

அதன் பிறகு சமீபத்தில் அவர் செய்து வரும் வேலைகள் யாவரும் அறிந்தவைகளே.

ஐரோப்பா யாத்திரை

பெல்காம் காங்கிரசுக்குப் பின் பெல்ஜியத்தில் புரசல்ஸ் நகரில் நடை பெற்ற நசுக்கப்பட்ட நாட்டினர் மகா நாட்டிற்குப்

பிரதிநிதியாக ஐரோப்பாவிற்குச் சென்றார். ரஷியாவிற்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பி வந்ததும், 1927-வது வருடம் சென்னை காங்கிரசில் காங்கிரஸ் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-வது வருஷமும் பழையபடி அவரைக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

வட இந்தியாவில் தொழிலாளர்களிடை அவருக்கு அதிக செல்வாக்குண்டு. ஹிந்துஸ்தானியில் மிக சாமர்த்தியமாகப் பேசும் வல்லமை யுடையவர். அதனால் ஜனங்களை வசப்படுத்தும் சக்தி யுடையவர். அவர் இரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். ஒன்று தனது 8 வயதுள்ள புத்திரி இந்திராவிற்கு எழுதிய கடிதங்கள். மற்றொன்று சோவியத் ரஷியாவைப் பற்றியது. அக் கடிதங்கள் அழகிய உருக்கமான நடை அமையப் பெற்று, தந்தை மக்களிடம் காட்டும் அன்பிற்கு அணிகலமாகும். அவர் ஐரோப்பா வெங்கும் பிரயாணம் செய்திருக்கிறார்.

—தமிழ் நாடு.

சிவசைலம் வள்ளியம்மை திருமணம்

[ச. பழநிசாமி அவர்கள்]

"மன்றல் வாழ்த்து"

பொன்விளைக்கும் பொருநைநதி வளம்மிகுவாழ்
வார்குறிச்சிப் பொன்னம் மாட்கு
இன்பம்மிகு உவப்பெய்த எல்லவரும்
சான்றோனென் றிசைக்கப் பெற்ற
நன்மைநிறை சிவசைலம் பிள்ளையின்நல்
உளத்தினிலும் நங்கை யர்க்குள்
மின்மணியாம் மங்கலங்கள் பலவும்நின்ற
வள்ளியம்மை தன்னு ளத்தும்
அன்பொத்த காதலெழ அறநெறியின்
வாழ்வதற்கு ஆன்றோர் கள்தாம்
சென்றவுயர் நெறிபற்றி வதுவைவினை
செய்திடுவான் சுக்கி லத்தில்
நன்மைநிறை கார்த்திகைத் திங்களிரு
பானொன்றும் நாளி னிற்பரங்
குன்றமதில் மங்கலமாய் மன்றல்நிகழ்
மணமக்கள் வாழி மாதோ.

நையாண்டி

(திருக்கபசம் எழுதியது)

பருத்துக் குறுகிய கட்டைபோன்ற தேகமும், கருத்து விரிந்து கழன்று விழுந்துவிடுவது போலிருந்த பெரிய கண்களும், கத்தரிக்காய் மூக்கும், தொங்கிய காதும், சுவைத்து விட்டு எறிந்த பனங்கொட்டையின் நார்போல் பரட்டை மயிரும், உரத்த குரலும், மெல்லிய இரும்புக் கம்பிகளை ஒத்த ரோமங்கள் ஒன்றாகச் சேர்ந்து வளர்ந்து கூடிய தாடியுமுடைய ஒருவர், நெற்றியிலும் தோளிலும் நிரம்ப விபூதி யணிந்து குளிர்ந்த நிழல் தரும் ஒரு வேப்பமரத்தடியில் ஆடம்பரமாக அமர்ந்து, "தானத்தைவிட நிதானம் பெரிது" என்று தன் முன் இருந்த சிலருக்கு உபதேசஞ் செய்தார். நாயைக் கண்டவுடன் கல் கிடைத்ததுபோல் நான் அந்த வேளையில் அவ்விடம் தோன்றினேன். "தானத்தைவிட நிதானம் பெரிது" என்று வேம்படியிலிருந்த துறவி சொன்னதைக் கேட்டு எனக்குச் சிறிது நகைப்பு வந்தது. ஆயினும் அதை அடக்கிக் கொண்டு, "முற்றத் துறந்த உத்தமரே! அடியேன் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதற்கு இடந் தருவீரோ?" என்று கேட்டேன். யமன்போன்ற அந்தத் துறவி தன்னுடைய ஆந்தைக் கண்களை உருட்டிக் கொண்டு, "என்ன கேட்க வேண்டும்? கேட்கலாம்" என்றார். நான் உடனே கொஞ்சம் முன்னே நடந்து, "சுவாமிகளே! நீங்கள் சொல்வது வாஸ்தவம். ஆனால், எல்லாரும் நன்றாயறிந்த ஒரு விஷயத்தைத் தாங்கள் புதிதாகக் கண்டுபிடித்தது போல் சொல்லுவதைப் பார்த்தால் விந்தையாயிருக்கிறது" என்றேன். துறவியினுடைய ஆந்தைக் கண்கள் இதைக் கேட்டவுடனே, முன்னிலும் பெரியவைகளாயின. அங்கிருந்தவர்களெல்லாம் என்னை உற்று நோக்கினார்கள். நான் ஒன்றையுங் கவனியாமல், தாங்கள் சொல்வது எப்படி யிருக்கிறதென்றால், "காக்கைக்குக் கறுப்பு நிறம், கொக்குக்கு வெள்ளை நிறம்; கரும்பு தித்திக்கும், வேம்பு கசக்கும், விளக்கு ஏற்றினால் வெளிச்ச முண்டாகும், கல்லின் மேல் குத்தினால் கைநோவும்' என்று சொல்வதைப்போ லிருக்கிறது" என்று மொழிந்தேன். அப்போது துறவி சற்றே கனைத்துக் கொண்டு "தானத்தைவிட நிதானம் பெரிது" என்பதை நீ விளக்கிக் காட்டுவாயா? என்றார்.

"ஆ, ஹா, காட்டுகிறேன்"

"எப்படி சொல் பார்ப்போம்?"

"தானம் என்பது மூன்றெழுத்து, நிதானம் என்பது நான்கெழுத்து.. இதில் எது பெரிதென்று மண்வீடு கட்டி விளையாடும் சிறு பிள்ளையுஞ் சொல்லிவிடுமே" என்று கூறிச் சிரித்தேன். துறவிக்குக் கடுங்கோபம் பிறந்தது: கண் சிவந்தது; உதடு துடித்தது. தானிருந்த இடத்தை விட்டு எழுந்து வந்தார். நான் பின்னால் நடந்தேன். அவர் நிற்க, நானும் நின்றேன். அவர் அடிஎடுத்து வைக்க, நானும் பின்னே நடந்தேன். இவ்வளவுக்கும் நான் திறந்த பல்லை மூடவில்லை.

"என்னடா, பல்லைக் காட்டுற ?" என்றார்

"வல்லவனுக்குப் பல்லும் ஆயுதம்" என்றேன்

அவருடைய கோபம் இதனால் தணியவில்லை. சற்று நின்று யோசித்தார். "ஐயா! நீங்கள் கோபித்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்குத் தெரிந்ததை நீங்கள் சொல்லுகிறீர்கள்; எனக்குத் தெரிந்ததை நான் சொல்லுகிறேன். தானத்தைவிட நிதானம் தான் பெரிது, பல்லைக் காட்டுவது என்னுடைய வழக்கம்" என்று பொறுமையுடன் சொன்னேன்.

"அந்தப் பல்லைத் தகர்த்து விட்டால்?" என்று துறவி கேட்டார்.

"அப்போ தானமுமில்லை, நிதானமுமில்லை" என்று விடையளித்தேன்.

"அடே, பயலே, உனக்கு மிதமிஞ்சிய கர்வம் பிடித்திருக்கிறது. யாராவது உன் பல்லைத் தட்டிவிடுவார்கள். ஜாக்ரதையாயிரு. கொல்லைக்காட்டு நரியைப்போலே பல்லைக் காட்டாதே. கற்றவர்களை அவமதியாதே" என்று தாடித் துறவி எனக்குப் புத்தி புகட்டினார்கள். எனக்கும் அவருக்கும் பத்தடி தூரம் இருந்தது. ஆகையால் என் மனதைத் தைரியஞ் செய்துகொண்டு,

"கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு" அல்லவா? என்று கேட்டேன்.

"ஆமா, அதற்கென்ன ?"

"உமக்குச் சென்றவிட மெல்லாஞ் செருப்பு" என்று சொல்லிவிட்டு நான் ஓட்டம் பிடித்தேன். அந்தப் பனங்கொட்டைத் தலையன் அப்புறம் என்ன செய்தானோ தெரியாது. ஏனெனில்! நான் திரும்பிப் பாராமல் ஓடிவந்து விட்டேன்.

Published by V. Subbiah Pillai for The S. I. S. S. W. P. Tinnevelly, Ltd., ; Nos. 1 to 8 Printed by C. M. & Sons, Nos. 9 to 12 Printed by The Progressive Printers, Madras.